பக்கங்கள்-16 | 30.தை.2022 | விலை-40.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -370



## யார் தமிழினத் துரோகிகள்?



## தேசிய பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த தவறினால் சர்வதேச நாடுகளின் உதவியோடு தீவிரவாதம் தலைதூக்கும்



## சர்வதேச விசாரணைகள் சாத்தியப்படுமா?



## "13வது திருத்தச்சட்டமும், மாகாண சபைத் தேர்தலும்" நடப்பது என்ன? – மாவை சேனாதிராஜா

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தேசிய பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தத் தவறினால், சர்வதேச நாடுகளின் உதவியோடு தீவிரவாதம் தலைதூக்கும்

நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது தற்பொழுது கேள்விக்குறியாக மாறிக் கொண்டிருக்கின்றது. அந்த டிப்படையில் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவை இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இந்த நாட்டில் ஒரு பொருளாதார கட்டமைப்பு ரீதியாக, பூகோள அரசியல் ரீதியாக பாரிய சிக்கல் யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் 2022 ஆம் ஆண்டில் காலடி எடுத்துவைத்திருக்கும் காலப்பகுதியில் கூடுதலாக சர்வதேச பூகோள அரசியல் ஊடாக இந்த நாட்டுக்குள் இலங்கை நாட்டினுடைய இறைமை தேசியம் பாதிப்படையுமளவிற்கு இந்த நிலை மாற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக சர்வதேச நாடுகள் இலங்கை மீது குறிவைப்பதன் முக்கிய நோக்கம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் போர் ஏற்படுமாக இருந்தால் இலங்கையினுடைய திருகோணமலை இயற்கை துறைமுகம் சாதகமாக அமையும் என்பதே. ஏனென்றால் வான் மார்க்கமாக படைகளை நகர்த்த முடியாத சூழலில் திருகோணமலை துறைமுகத்தை அரணாகக்கொண்டு அனைத்து விடயங்களையும் ஆசிய பசுபிக் நாடுகளுக்கு நகர்த்த முடியும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. அதுபோன்றே தேசிய பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த தவறும் பட்சத்தில் குறிப்பாக இந்தியாவினுடைய புலனாய்வு பிரிவு, அமெரிக்காவின் புலனாய்வு பிரிவு, சீனாவினுடைய புலனாய்வு பிரிவு அனைத்தும் இந்த நாட்டிற்குள் தற்பொழுது காலடி எடுத்து வைத்து தங்களுடைய புலனாய்வு நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.
ஆகவே இவ்வாறிருக்கும் பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலப்பகுதியில் வடக்கு கிழக்கு பிராந்திய கடற்பரப்பில் அல்லது ஆகாய மார்க்கமூடாகவோ எந்தவொரு நடவடிக்கைகளையும் செய்ய முடியாதிருந்த ஏனைய நாடுகள் தற்பொழுது தமக்கு சாதகமாக இவற்றை பயன்படுத்தி இன்று இலங்கைக்குள் உள்நுழைந்திருக்கின்றார்கள்.
இன்று இலங்கையின் கூடுதலான கரையோரப் பகுதிகள் சீன அரசாங்கத்திற்கு விற்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகம், போர்ட்சிற்றியும் சீன மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. அது போன்று அமெரிக்காவும், இந்தியாவும் தனக்கான ஒரு பகுதியை தேடிக்கொண்டிருக்கின்றது.

இதனூடாக ஒப்பந்தங்கள் இந்த நாட்டிலே இன அழிப்பு அல்லது இனப்படுகொலை யுத்தம் இடம்பெற்றதா என்றால் இல்லையென்னும் அளவிற்கு நிலை தற்பொழுது மாற்றப்பட்டு தங்களின் சுயலாப அரசியலுக்காக குறித்த நாடுகள் அடிமைத்தனமாக இலங்கையை பயன்படுத்துவதற்கு அவர்களை துறத்திக்கொண்டிருக்கின்றார்கள். உக்கிரமமாக போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற பொழுது கண்ணோக்காத 52 சர்வதேச நாடுகள் விடுதலைப்புலிகளுடன் ஆதரவாக செயற்பட்ட பொழுதிலும் அவர்கள் தற்பொழுது இந்த நாட்டில் யுத்தம் இடம்பெற்றதா என்ற கேள்வியை முன்வைத்திருக்கின்றார்கள்.

ஆகவே இதுவொரு போர்க்குற்றம், விசாரிக்கப்பட வேண்டும் என்ற முன்னெடுப்பையும் சர்வதேச நீதிமன்றங்கள் இந்த போர்க்குற்றங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் வைத்திருக்கின்றார்கள். அவற்றிற்கெல்லாம் காரணம் அமெரிக்காவையும் இந்தியாவையும் சீனாவையும் இலங்கை அரசு ஆதரித்து போகும் ஒரு நோக்கமாகத் தான் இருக்கின்றது. இவ்வாறு ஆதரித்து போகின்ற நோக்கத்தில் ஏனைய நாடுகள் இந்த நாட்டினுடைய புலனாய்வு கட்டமைப்பை சிதைத்து இந்த நாட்டிற்குள் எவ்வாறு ஊடுறுவி இந்த நாட்டை அந்நியப்படுத்த முடியும் அல்லது தம்வசப்படுத்த முடியும் தமது தொழில் நோக்கங்களை இங்கு நிறைவேற்ற முடியும் என்ற நிலைப்பாட்டையும் அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.
ஆகவே இந்த ஜேஏஇ ஊஜனுஇ வுஜனு போன்ற இராணுவ புலனாய்வு கட்டமைப்புக்களுக்கு அதிகாரங்களை வழங்குவதனூடாக உலகலாவிய புலனாய்வு கட்டமைப்பு இலங்கையில் காலடி எடுத்து வைத்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதை தடை செய்வதற்கு மிக முக்கியமாக அமைகின்றது. இது குறித்த ஜனாதிபதியினுடைய அதிகாரங்கள் ஒரு துஷ்பிரயோகமாக பாவிக்கப்படுவதால் எதனையுமே செய்யமுடியாத சூழல் ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக அவர்கள் சர்வதேச ரீதியாக அல்லது இலங்கையிலே தற்பொழுது முஸ்லிம் தீவிரவாதம் தலைதூக்கியிருக்கின்றது. முஸ்லிம் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது முஸ்லிம் தீவிரவாதத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள். சஹ்ரானினுடைய குண்டுத் தாக்குதல் என்பது நாட்டிலே இடம்பெற்றதன் பின்னர் 1400 கோடிக்கு மேல் அவர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பணங்கள் எங்கிருந்து வந்தன எவ்வாறு கொடுக்கப்பட்டன என்பதற்கான விசாரணைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே இதுவரையில் அதற்கான தீர்வுகளை இவர்கள் கண்டுபிடிக்கவில்லை. 1000 க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதில் அசாத்சாலி போன்ற மிக முக்கியமானவர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.



எனவே நாட்டிலே முஸ்லிம் தீவரவாதம் தற்பொழுது தலை தூக்கியிருப்பதை காண்பித்து நாட்டினுடைய பொருளாதாரத்தை கோட்டைவிடுமளவிற்கு நிலைமை தற்பொழுது மாற்றம் பெற்றுள்ளது. சர்வதேச ரீதியாக ஏற்படுகின்ற தீங்குகளில் இருந்து இந்த நாட்டை பாதுகாக்க தமிழர்கள் என்றோ முஸ்லிம்கள் என்றோ சிங்களவர் என்றோ பார்க்காது ஒன்றிணைந்து இந்த நாட்டை காப்பற்றும் நிலைமைகளை தற்பொழுது இருக்கும் அரசாங்கம் உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கும் பொழுது தான் ஒற்றுமையுடன் இந்த நாட்டை பாதுகாக்க முடியும். அதற்கு ஒரு முன்நடவடிக்கையாக தமிழ் தரப்பை பொறுத்தவரையில் தமிழ் போராளிகள் மிகவும் தேர்ச்சிபெற்றவர்கள். சர்வதேச ரீதியாகவும் சரி உள்ளூர் அரசியல் ரீதியாகவும் சரி அணுகுமுறைகளை ஏற்படுத்துவதற்கும் அல்லது அவர்களின் இராணுவ கட்டமைப்பை பலப்படுத்திக்கொள்வதற்கும். தமிழ் தரப்புக்களுடன் இவர்கள் பேச்சுக்களை நடத்தி வடகிழக்கு ஒன்றிணைந்து இந்த நாட்டில் அனைவரும் சமமாக வாழக்கூடிய சூழலை இந்த அரசாங்கம் ஏற்படுத்துவதால் மட்டுமே இந்த தேசிய பாதுகாப்பை அவர்கள் உறுதிப்படுத்த முடியும். தேசிய பாதுகாப்பில் குறிப்பாக பலவீனங்கள் இருப்பதனூடாகத் தான் குறித்த நாடுகள் எமது நாட்டுக்குள் தமது அதிகாரங்களை செலுத்துகின்ற நிலை தோற்றுவிக்கப்படுகின்றது.

ஆகவே தற்பொழுதிருக்கின்ற இந்த அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடிக்குள் சென்று கொண்டிருக்கின்றது. பாரிய எதிர்ப்புகளை சம்பாதித்துக் கொண்டிருக்கின்றது. ஒரு தீர்வு என்ற அடிப்படையில் தமிழ் தரப்புக்களுடன் இதுவரையில் பேசாதநிலை காணப்படுகின்றது. கொரோனா வைரஸினுடைய தாக்கத்தை காரணம்காட்டி சற்றுகாலம் அரசியல் நடவடிக்கைகள் இல்லாவிட்டாலும் கூட தற்போதைய காலகட்டத்திலே அதனை நடைமுறைப்படுத்துவதனூடாக சிறந்த ஒரு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அரசாங்கம் அதனை இதுவரையில் செய்யவில்லை. மாறாக அவர்கள் இந்த பொருளாதார ரீதியான பிரச்சினைகளை கட்டுப்படுத்த முடியாதுதிணறிக்கொண்டிருக்கின்ற சூழலில் எவரேனும் கூடுதலான பணத்தொகையை தருவார்களா என்று ஏனைய பின் தங்கிய நாடுகளிடம் கூட கடன் வாங்குமளவிற்கு இலங்கையினுடைய தேசியத்தின் தன்மை மிக குன்றிப்போயிருக்கின்றது. அல்லது அதை வெளியில் சொல்வதற்கு ஒரு வெட்கமான செய்தியாக இருக்கின்றது.

எனவே இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் என்ற ஒரு விடயத்தை பற்றி தற்பொழுது பேசிக்கொண்டிருப்பவர்கள் அல்லது மாகாணசபையினுடைய அதிகாரங்களை வடகிழக்கில் சரியான முறையில் வழங்கினால் அல்லது மாகாணசபை முறைமையை கொண்டு வந்து அனைத்து மாவட்டத்திலும் மாகாணசபை இடம்பெற்றால் உண்மையிலே அனைத்து மாகாணங்களிலும் இந்த ஆட்சி முறைமை ஏற்பட்டால் நிச்சயம் நல்லதொரு பலனை கிட்டமுடியும் என்பதே பலரின் எதிர்பார்ப்பு. இருந்தாலும் தற்பொழுது இந்த அரசாங்கத்தினால் அமுலாக்கப்பட்டிருக்கும் சட்டங்களை பார்த்தால் எவருமே செயற்படமுடியாத அளவிற்கு நிலைமை தோற்றம் பெற்றிருக்கின்றது என்று தான் கூறவேண்டும்.

எனவே சின்ன சின்ன விடயங்களில் இந்த அரசாங்கம் தவறிழைக்குமாக இருந்தால் பாரிய விடயங்களில் இருந்து ஒருபோதும் தப்பமுடியாத சூழல் உருவாகும். இந்த நாட்டில் ஒரு முஸ்லிம் தீவிரவாத குழுக்கள் சஹ்ரானினுடைய தலைமையிலே இயங்கியது. இயங்கி ஈஸ்டர் குண்டுத் தாக்குதலிலே நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர் இன்னும் பலர் சிகிச்சை பெற்றுவரும் நிலைக்கு நிலைமை மாற்றப்பட்டிருக்கின்றது. எனவே தொடர்ந்து முஸ்லிம்களை அடக்கியாள வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்த அரசாங்கம் கையில் எடுக்குமாக இருந்தால் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலைக்கு அவர்கள் செல்ல வேண்டிய சூழல் ஏற்படும். ஏனென்றால் பொருளாதார ரீதியாக ஒரு வரவை நாட்டிற்கு கொடுப்பவர்கள் கூடுதலாக முஸ்லிம் வியாபாரிகள் தான்.

எனவே முஸ்லிம் வியாபாரிகளை சுதந்திரமான முறையிலே அவர்களை வியாபாரம் செய்ய விடுவதன் ஊடாக இந்த அரசாங்கம் நிறைவான வளர்ச்சியை பெற்றுக்கொள்ளும் என்பது இன்றைய நிலைப்பாடு. எனவே நிறைவான வளர்ச்சியை பெற்றுக்கொண்டு இந்த நாடு சுபீட்சமான வழியில் செல்வதற்கு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை அரசாங்கம் பெற்றுக்கொடுக்குமாக இருந்தால் மட்டுமே அது சாத்தியப்படும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

### மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் கொரோனாவும், வரவிருக்கும் ஜெனீவா கூட்டத்தொடரும்

நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு திணறிவரும் நிலையில் ஒமிக்ரோன் கொரோனா பிறழ்வு இலங்கையில் வேகமெடுக்க தொடங்கியுள்ளது. நாடு மீண்டும் முடக்க நிலைக்கு செல்லும் அபாயம் உள்ளதாக சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது. ஏற்கனவே கொரோனா 1ஆம், 2ஆம், 3ஆம் அலைகளின் தாக்கத்தால் அவ்வப்போது நாடு முடக்கப்பட்டதன் எதிரொலி இன்றைய பாரிய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாக உள்ள நிலையில் மீண்டும் ஒரு முடக்க நிலை வந்தால் மிகப்பெரும் பட்டினிச்சாவு எனும் அழிவுக்கு செல்வதுடன், நாட்டில் எரிபொருள் இல்லாத நிலையில் மின்சாரதடை ஏற்படவுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் கடந்த காலங்களை போல் அல்லாது இம்முறை நெல் உற்பத்தி பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பன்முக நெருக்கடிக்குள் அரசு சிக்கி திணறிவருகின்றது. எனவே உடனடியாக ஒமிக்ரோன் வைரஸ் தாக்கத்தில் இருந்து மக்களை காப்பதுடன் தடுப்பூசி செலுத்த தவறியவர்களுக்கு கடும் அபராதம் விதிப்பதுடன் சுகாதார நடை முறைகளை இறுக்கமாக பேண அரசு நடவடிக்கை எடுப்பதுடன் மக்களின் வாழ்க்கை சுமையை குறைக்க அரசு நிவாரண உதவிகளை உடனடியாக வழங்க வேண்டும் என்பதுடன் அனைத்து கட்சிகளுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இது ஒருபுறமிருக்க வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடர் இடம்பெற உள்ளது. இம்முறை ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கான அழுத்தத்தை குறைக்க அரசு பிரயத்தனம் மேற்கொண்டு வருவது தெளிவாக தெரிகின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் சரத்துக்களில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அதற்காக வர்த்தமானி அறிவிப்பு வெளியாக உள்ளதாகவும் வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நீண்ட காலம் சிறையிலுள்ளவர்களை துரித கதியில் விசாரித்து நீதி வழங்குதல் கைது செய்யப்படுபவர்களை துன்புறுத்தாமல் சித்திரவதை செய்யாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் நிலைமாறு அரசியலை புரிந்து கொண்டு செயற்பட முடிவு எடுக்கவுள்ளதாகவும் இலங்கை இராணுவத்துக்கு பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏற்படுகின்ற தடையினை நீக்க அரசு இவ் ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடரை பயன்படுத்த முயலும் என தெரியவருகின்றது.

எனவே அரசு இக் கூட்டத்தொடரிலாவது உலக நாடுகளின் எதிர்ப்பை சம்பாதிக்க தமிழர்களுக்கான ஓர் நிரந்தர தீர்வை வழங்க முன்வருவதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நீதியை வழங்க முன்வர வேண்டும் என்பதே வரும் ஜெனீவா கூட்டத்தொடரில் இருந்து இலங்கை தப்ப ஒரே வழியாகும்.

# 175 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



இந்நிலை ஏற்படுவதற்கான காரணங்கள் யாதெனில், அமைப்பின் அரசியல் கட்டமைப்பின் மீதிருந்த இறுக்கமான தாக்கம் காப்பிடம், உணவுப்பொருள் மற்றும் வெவ்வேறு உபகரணங்களுக்கான களஞ்சியங்கள் ஆகியபிரிவுகளுடனான நீண்டகாலமாக உருவாக்கப்பட்ட தனித்துவமான இராணுவ உட்கட்டமைப்பு அத்துடன் திகைப்பு, விடாமுயற்சி, நடவடிக்கைக்கு முற்கூட்டியே அவதானமாகத் தயார்ப்படுத்தல், நடவடிக்கையை மேற்கொண்டபின் படைகளை அதிகூடியளவில் பரவலாக வைத்திருத்தல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்ட கெரில்லாத் தந்திரோபாயம் போன்றனவாகும். கெரில்லாத் தந்திரோபாயம் அமைப்பின் ஒட்டுமொத்த அளவிலும் தெளிவாக பலாபலன்களைத் தந்தது. ஆனால், குறிப்பாக வினைத்திறன் மிக்கதாகச் சிறிய படைப்பிரிவுகளுக்கும் ஆரம்பக் கெரில்லாப் பிரிவுகளுக்குமே இருந்தது. எடுத்துக்காட்டாக, உச்ச அளவில் பரந்திருந்த அரச படையாட்களுக்கு எதிராகக் கொள்ளையர்கள் கட்டளைக்கமைய ஆயுதப் போரைத் தொடுத்தனர். பின்னர் ஆயுதங்களை மறைத்து வைத்துவிட்டு மிகவும் சாத்தியமான சூழ்நிலை தோன்றும்வரை வீடுகளுக்குப் பிரிந்துசென்று தங்கினர். இன்னமும் இலகுவாகத் தனியான குழுக்களால் இதனை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

மறுவளத்தில் பார்த்தால், மக்கள் வாழ்விடத்தில் போராளிகள் இருக்கும் காலம் நீண்டு செல்லுமானால், அவர்களை அழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்குச் சாத்தியமான சூழ்நிலை தோற்றுவிக்கப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் சம்பவமாக, 1951 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஸ்தனிஸ்லாவ் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று அதாவது மொத்த எண்ணிக்கை 45 பேரைக் கொண்ட எஞ்சியிருக்கின்ற சில கிளர்ச்சிக் குழுக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விளங்குகின்றது. சூழ்நிலை நன்கு அறியப்படாத நிலையிலும் கொள்ளையர்களின் ஆளணி, ஆயுதங்கள் ஆகியன பற்றிய போதிய தகவலின்றியுமே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் பதுங்கியிருக்கச் சாத்தியமான இடங்கள் மாத்திரமே தெரிந்திருந்தன. ஆகவே தான், கட்டளைப்பீடம் அம்மாநிலத்திலுள்ள நான்கு மக்கள் வாழ்விடங்களிலும் ஒரேநேரத்தில் தேடுதலை மேற்கொள்வதென்ற தீர்மானத்தை எடுத்தது. ஒவ்வொரு தேடுதல் ஆய்வுக் குழுக்களும் 6 - 15 பேரை மாத்திரம் ஆளணியாகக் கொண்டிருந்தபோதும், நடவடிக்கையை மேற்கொள்கின்ற தருணத்தில் பிரதேசங்களை முற்றுகைக்குட்படுத்த வேண்டியேற்பட்டது. ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆட்கள் பங்குபற்றிய இந்நடவடிக்கையின் வினைத்திறனை 20 கொள்ளையர்கள் கொல்லப்பட்டதும் மூவர் கைது செய்யப்பட்டதும் வெளிப்படுத்துகின்றன.

ஆனாலும், கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய வழக்கமான விதிமுறைகளாக, போராளிகள் தளமிட்டுள்ள பிரதேசங்களை முன்னரேயே தனிமைப்படுத்தல், அவர்கள் பின்வாங்கச் சாத்தியமான பாதைகளில் பதுங்கித் தாக்குதல்களையும் தடைகளையும் ஒழுங்கமைத்தல், இனங்காணப்பட்ட குழுக்களை முற்றுகையிடல், பூரணமாக அவர்களை அழித்தல் போன்றனவே விளங்குகின்றன. கொள்ளையர்களை அழிக்கும் நடவடிக்கையில் பிரதேச மக்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பிரதேசத்திற்குரிய அதிகாரமுள்ள காவற்றுறையின்கீழ் உதவி ஆயுதக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இவற்றிற்கு இராணுவப் பணியாளர்கள், சோவியத் கட்சி உறுப்பினர்கள் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்களும் கம்சமோல்களும் (கம்யூனிஸ்ட் கட்சியின் இளைய அணியினர்) பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இதன்போது சமர் நடவடிக்கைகளின் வினைத்திறன் நேரடியாக சுறுசுறுப்பான முகவர் நடவடிக்கைப் பணியிலேயே தங்கியிருந்தது. இதனது வெற்றிக்குக் கூடியளவில் உதவிய விடயம் யாதெனில், மக்கள் வாழ்விடங்களுக்குச் செல்வதற்கான அடக்கமுடியாத கெரில்லாக்களின் ஆவலும் மக்களுடனான தொடர்பை அவர்கள் தொடர்ச்சியாகத் தேடுதல் அல்லது புனரமைத்தலுமாகும். கெரில்லாக்கள் இருப்புக்காக இத்தொடர்புகளில் தங்கியிருத்தல், நிலையற்ற வாழ்வு நிலை இருக்கின்ற காலகட்டத்தில், அதாவது அவர்களது பெரிய முகாம்கள் கலைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அவர்களின் பிரதான பலமாகத் திகழ்கின்றது. குறிப்பாக இதனால்தான், வெளிப்படையான சூறையாடல்களும் கைப்பற்றல்களும் (களவுகளும்) உ.தே.அ. போராளிகளின் பிரதான சமர்த் தாக்குதல்களினது பகுதிகளாக உள்ளடக்கப்பட்டன. இதனது விளைவால், மக்களின் மனநிலையில் திடீர் மாற்றமும் ஏற்பட்டது.

நாட்டுக்கு முன்னால் தமது பலமின்மையை உணர்ந்த உக்ரேனியத் தேசியவாதிகளின் இராணுவ அரசியல் அமைப்பினர் உண்மையாகவே பொதுமக்களை நோக்கி ஆயுதங் களைத் திருப்பினர். 1946 ஆம் ஆண்டு இவர்களின் கைகளால் 2000 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1947 ஆம் ஆண்டு 1500 பேர் படுகொலை செய்யப்பட்டனர். பத்தாண்டு காலத்தில் (1945தொடக்கம்1955ஆம்ஆண்டுவரை) அவர்களால் பதினேழாயிரம் சோவியத் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். அத்துடன், அவர்களால் 14424 நாசகாரப் பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 1948 - 1955 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் போராளிகளால் கிராமியச் சபைத் தலைவர்கள் 329 பேரும் கூட்டுப் பண்ணைத் தலைவர்கள் 231 பேரும் பிரதேசக் கட்சித் தொண்டர்கள் மற்றும் பிரதேச அமைப்புக்களில் பணியாற்றியவர்கள் 436 பேரும் கொல்லப்பட்டனர். மொத்தத்தில் உக்ரேனியக் கிளர்ச்சி இராணுவத்தினதும் உக்ரேனிய மக்கள் புரட்சி இராணுவத்தினதும் போராளிகள் நாற்பதாயிரம் வரையான ஆட்கள் (இராணுவப் பணியாட்களும் உள்ளடங்கலாக) கொல்லப்பட்டிருந்தனர்.

சோவியத் ரசியாவின் மேற்கெல்லை நெடுகிலுமுள்ள பரந்த பிரதேசத்தில் போருக்குப் பின்னான காலங்களில் தோன்றிய தேசியக் கிளர்ச்சிவாதம் நாட்டில் இராணுவ அரசியல் திடமின்மைக்கான பலமான காரணியாக இருந்தது. இதனது உருவில் ஆயுதப்படைகள், சட்ட அமுலாக்கல் அமைப்புகள், அரச பாதுகாப்புச் சபைகள் ஆகியன கைதேர்ந்த ஆயுதந்தரித்த எதிரியைக் கொண்டிருந்தன. இவர்களுடனான சமர் சிறப்பான "உத்திகளையும் முறைகளையும் வேண்டியதாக இருந்ததுடன், செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆயுதப்படைகளின் கட்டமைப்புக்களில் மறுசீரமைப்பை ஏற்படுத்தவும் தூண்டியது. இச்சமரே கருணையற்ற துன்புறுத்தல்களுக்கும் இராணுவக் கருவிகள் பயன்படுத்தப்படாத போருக்கும் மிகவும் பொருத்தமான நடவடிக்கைகளைத் தேட நிர்ப்பந்திக்கின்றது.

சோவியத்திற்கு எதிரான கிளர்ச்சியாளர்களை அழிப்பதற்கான பிரதான பொறுப்பை உட்துறையமைச்சுப் படைகள் (உள்ளகப்படைகள்) ஏற்றுக்கொண்டன. 1941 ஆம் ஆண்டுக்கும் 1956 ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் அவர்கள் 56323 சமர் நடவடிக்கைகளையும் நேரடிச் சமர்களையும் மேற்கொண்டுள்ளனர். (இதில் 1947 - 1949 ஆம் ஆண்டு வரையான நடவடிக்கைத் தகவல்கள் இல்லாமையால், அவை சேர்த்துக்கொள்ளப்படவில்லை).

இவற்றின் போது கிளர்ச்சியாளர்கள் இறந்த நிலையிலும் காயமடைந்த நிலையிலுமாக 89678 பேரை இழந்தனர். உட்துறையமைச்சுப் படைகளின் இறந்தவர்களதும் காயமடைந்தவர்களதும் மொத்த இழப்பு 8688 பேராகும். குறிப்பாக இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர், உட்துறையமைச்சுப் படைகளில் இறந்தவர்களதும் காயமடைந்தவர்களதும் காணாமல் போனவர்களதும் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட நாலாயிரம் பேராகும். அதாவது கிட்டத்தட்ட இவ்வெண்ணிக்கையிலான உட்துறையமைச்சுப் படைகளே 1941 - 1945 ஆம் ஆண்டுப் பகுதிகளின் இழப்பாகும்.

அரச படைகளைப் பொறுத்தவரையில் போர்க்காலம் கடின படிப்பினைக் காலமாகவும் இராணுவத்திற்கு முரணான சமர்க்கலையினை அறிவதாகவும் வழக்கத்திற்கு மாறான எதிரியின் செயற்பாட்டிற்குப் பழக்கப்பட்டுக்கொள்வதாகவும் இருந்தது.

**தொடர்வான்....**
**நெற்றிபொறியன்**

# இலங்கை மீதான சீனாவின் அணுகுமுறை - திரைமறைவில் நடப்பது என்ன?

இவ்வுலகம் ஆச்சரியங்களால் நிறைந்தது. அன்றைய உலகம் போல அல்ல இன்றைக்கு நாம் காணும் உலகம். இன்றைய உலகம் முற்றிலும் வேறுபட்டது. தொழில்நுட்பங்களால் சிக்குண்டு பின்னிப்பிணைந்து உருண்டுகொண்டிருக்கிறது. மனித மூளைக்கு எட்டாத பல விடயங்களைப் பற்றி ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது. வானியல் துறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் அபரிமிதமானது. அபிவிருத்தியடைந்த சர்வதேச நாடுகள், அபிவிருத்தியடையாத அல்லது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அத்தனை முயற்சிகளையும். செயற்பாட்டு ரீதியாகவும் களத்தில் குதித்துள்ளன. இதற்குள் தான் இன்றைய சர்வதேச நாடுகளின் போட்டி அதிகரித்துள்ளது. அமெரிக்கா. சீனா. இந்தியா. ரஷ்யா. பிரித்தானியா. வடகொரியா. ஜப்பான். சுவீடன் என பல நாடுகள் இன்றைய இவ்வுலகத்தில் பாரிய இலக்குகளை முன்வைத்து சர்வதேச ரீதியாக பயணித்துக்கொண்டிருக்கின்றன. விஞ்ஞானம். மருத்துவம். தொழில்நுட்பம். வானியல் துறை. சுகாதாரம். சுற்றுலாத்துறை. அபிவிருத்திகள் அனைத்துத் துறைகளிலும் இன்னுமின்னும் தத்தம் நாடுகளை மேம்படுத்திச் செல்வதிலும். எதிர்கால இவ்வுலகின் சாம்ராஜ்யத்தை கட்டியாளுவது யார் என்கிற போட்டியோடு பயணித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் தான் இவ்வுலகின் அதிபதியாகத் திகழும் அமெரிக்காவை எப்படியும் வீழ்த்தி. இவ்வுலகை தாமே ஆளவேண்டும் என்கிற கனவுடன் சீனா தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகின்றது. ஆசிய-பசுபிக் வலயங்கள் தனது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் எனவும். டொலருக்குப் பதிலாக தனது நாணயமே இவ்வுலகில் வலம் வரவேண்டும் என்றும். சர்வதேச அளவில் தனது உற்பத்திப்பொருட்கள் முதலிடத்தில் இருக்கவேண்டும் எனவும் சீனா விரும்புகின்றது. அதற்காக இயற்கைச் சூரியனுக்குப் பதிலாக செயற்கையாக சூரியனை உருவாக்கும் திட்டத்திலும். விண்வெளித் துறையில் தனக்கென தனியான முத்திரை பதிக்கும் பொருட்டு. தானே தனியானதொரு விண்வெளிக்கூடத்தை ஸ்தாபித்து வெற்றிகரமாக திட்டங்களை செயற்படுத்தியும் வருகின்றது.

மேற்குலக நாடுகளுக்கு நிகராக தன்னை ஆசிய பிராந்தியத்தில் பலப்படுத்தும் வேலைத்திட்டங்களில் சீனா தன்னை எப்போதோ தயார்ப்படுத்திவிட்டதாகவும் அதற்கான திட்டங்களையே மெதுமெதுவாக செயற்படுத்தி வருவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அதற்காகவே பெரும்பாலான மேற்கத்தேய நாடுகளுடன் சுமுகமான முறையில் கைகோர்ப்பதையும் சீனா விரும்புகின்றது. இன்று அமெரிக்காவுக்கு எதிரான நாடுகளுடன் சீனா நட்புறவில் உள்ளமையும் கருத்திற்கொள்ளப்படவேண்டும். அதனொரு கட்டமாகவே இன்று சீனா தலிபான்களுடன் கைகோர்த்துள்ளது.

தனது திட்டங்களுக்காக சீனா ஏற்கனவே சில நாடுகளை கையகப்படுத்துவதற்கான திட்டங்களை தீட்டியுள்ளது. அண்மையில் ஆபிரிக்க நாடொன்றின் விமான நிலையம் சீனாவின் கையகப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளதாகவெல்லாம் செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தியடைந்துவரும் அல்லது அபிவிருத்தியடையாத நாடுகளை சீனா குறிவைக்கின்றது. அங்கெல்லாம் அவர்களுக்குத் தேவையான கடன்களை அள்ளி வழங்குகின்றது. அதற்குப் பதிலாக அந்தந்த நாடுகளின் இடங்களை குத்தகைக்கு எடுப்பதும். அங்கு தமது வர்த்தக நோக்கிலான கட்டடங்களை நிறுவி. தனது பொருட்களை. தனது மக்களை வேலைக்காகக் குடியமர்த்தும் செயற்றிட்டங்களை சீனா நடைமுறைப்படுத்துகின்றது. அந்தந்த நாடுகளில் சீனா அமைக்கும் கட்டடங்கள் சீனாவில் இன்று கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களுக்கு ஒப்பானதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



இத்தகையதானதொரு சதிவலைக்குள் தான் ஆசியாவின் அதிசயமான இலங்கைத் தீவு அகப்பட்டு சிக்கி சின்னாபின்னமாகிக்கொண்டிருக் கின்றது என்கிறார்கள் நோக்கர்கள். முன்னாள் ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் ஆட்சிக்காலத்தில் தான் சீனாவின் இலங்கை மீதான கரிசனைப் பார்வை பட ஆரம்பித்தது. ஏனெனில் மஹிந்த ராஜபக்ஸவின் அரசாங்கத்திற்கு சீனா பாரியளவிலான யுத்த உபகர ணங்களை வழங்கியது. சர்வதேச நாடுகளின் உதவியுடன் மழுங்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகளுடனான யுத்தத்திற்கு பாரியளவில் இலங்கைக்கு உதவிகளைச் செய்த நாடாக சீனா தான் முன்னணி வகிக்கின்றது. கடனாக அப்போதே யுத்த உபகரணங்கள். மருத்துவப் பொருட்கள் என சீனா வழங்கியது. இதற்குக் கைமாறாக அப்போதைய ஆட்சியாளர்களால் சீனாவுக்கு இலங்கையின் பிரதேசங்கள் குத்தகை என்கிற அடிப்படையில் வழங்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக மஹிந்த ராஜபக்சவின் ஆட்சி சீன சார்பான ஆட்சியாக மாறியது. இலங்கைக்கு சீனா பாரிய ஒப்பந்தங்களுடன் கடன்களை வழங்கியது. இலங்கை தடுமாறியபோதெல்லாம் டொலர்களால் இலங்கை அரசை அர்ச்சித்தது. இலங்கையில் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. துறைமுக அபிவிருத்தி. மேம்பாலங்கள். பாரிய வீதிகள். கட்டடங்கள். விமான நிலையம். கொழும்பு துறைமுக நகரம் என சீனாவின் உதவியால் இலங்கை புதிய வடிவம் பெற்றது எனலாம்.

இலங்கை மீதான சீனாவின் இந்தக் கரிசனை அமெரிக்கா. இந்தியா போன்ற நாடுகளுக்கு பெரும் சவாலாகவும். அச்சுறுத்தலாகவும் இன்று வரை இருக்கிறது. சீனாவை இலங்கை சார்ந்து பயணிப்பதை மேற்கூறிய நாடுகள் விரும்பவில்லை. மாறாக இலங்கையில் தமது பங்களிப்பும் இருக்கவேண்டுமென தாமும் பங்குக்கு கடன் உதவிகளை வழங்கி வருகின்றன அமெரிக்காவும் இந்தியாவும். மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசின் ஆட்சிக்கவிழ்ப்பின் பின்னரும் அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்சவே தற்போது ஜனாதிபதி அரியணையில் வீற்றிருப்பதால் சீனா தொடர்ந்தும் தனது செயற்பாடுகளை செவ்வனவே இலங்கையில் செயற்படுத்த அனைத்து சூழல்களும் ஏதுவாக அமைந்தன எனலாம். இது சீனாவிற்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றி. விடுதலைப்புலிகளது செயற்பாடுகள் இலங்கையில் இருந்த காலத்தில். சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக சீனாவின் பார்வையும் செயற்பாடுகளும் மிகக்குறைவாகவிருந்த நிலையில். இன்று நிலைமை மிக மோசமாகியுள்ளது. சீனக் கப்பல்கள் எந்நேரத்திலும் இலங்கை வந்துசெல்லும் அளவிற்கு சீனாவின் பிடியில் இலங்கை சிக்கியுள்ளது.

கொவிட் என்கிற வைரஸ் திடீரென உலகையே ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. இவ் வைரசானது சீனாவின் வூகான் என்கிற மாகாணத்தில் இருந்துதான் பரவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை சீனா திட்டமிட்டே பரப்பியுள்ளதாக இன்றுவரை சீனாவின் மீது குற்றச்சாட்டுக்கள் இருக்கிறது. அமெரிக்கா இந்த விடயத்தில் சீனாவின் மீது கடும் கோபத்தில் உள்ளது. எது எவ்வாறாகவிருப்பினும் இந்த கொவிட் நிலைமையால் நாடுகளுக்குள் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினை சீனா தனக்குச் சார்பாகப் பயன்படுத்தி அதில் வெற்றியும் கண்டுவருகின்றது. கடந்த ஓகஸ்ட் 17-ம் திகதியன்று. கொரோனா தடுப்பு நடவடிக்கைகள். சரிந்து கிடக்கும் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புதல். இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்களுக்காக இலங்கை அரசுக்கு 6.150 கோடி இலங்கை ரூபாவைக் கடனாக அளித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது சீனா.

இலங்கையில் கொரோனா பரவலால். சுற்றுலாத்துறை முடங்கி யிருக்கிறது. நாட்டின் முக்கிய வருமான வழியான சுற்றுலாத்துறை முடங்கியிருப்பதால் மிகப்பெரிய பொருளாதாரச் சிக்கலில் இலங்கை இருக்கிறது. இதர வருமான வழிகளும் முடங்கியிருக்கின்றன. பலரும் வேலை இழந்து நிற்கிறார்கள். எனவே. இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தவே சீனாவிடம் கடன் பெற்றிருக்கிறோம் என்கிறது இலங்கை அரசு. கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாகச் சீனாவின் கடன் வலையில் சிக்கித் தவித்து வருகிறது இலங்கை.

2015இல் கொழும்பு துறைமுக நகரம் அமைக்கும் பணிகள் தொடங்கப் பட்டாலும். அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவின் சீன எதிர்ப்புக் கொள்கைகளால் பெரிதாக பணிகள் நடைபெறவில்லை. 2020-ல் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வெற்றிபெற்று பிரதமரானார். அவரின் தம்பி கோட்டாபய ராஜபக்ஷஜனாதிபதியானார்.இதையடுத்து கொழும்பு துறைமுக நகரம் அமைக்கும் பணிகளை வேகப்படுத்தினார் மஹிந்த ராஜபக்ஷ. கொரோனா தாக்கத்தால் பெரும் பொருளாதாரச் சரிவைச் சந்தித்தது இலங்கை. அதனால் வேறு வழியின்றி கொழும்பு துறைமுக நகரத்தைச் சீனாவுக்கு வழங்கும் முடிவுக்கு வந்தது இலங்கை அரசு. கொழும்பு துறைமுக நகரத்தின் முழு அதிகார உரிமையையும் சீனாவுக்கு வழங்கும் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைய பிரேரணையை அமலுக்குக் கொண்டுவந்தார் கோட்டாபய ராஜபக்ஷ.

ஒரு நாடு. உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து வாங்கும் கடனுக்கு வட்டி விகிதம் மிக மிகக் குறைவு. அதே ஒரு நாட்டிடமிருந்து இன்னொரு நாடு கடன் பெறும்போது அதற்கான வட்டித் தொகை மிகவும் அதிகம். சீனா இலங்கைக்கு வழங்கியிருக்கும் கடனுக்கு வட்டித் தொகை மிக மிக அதிகம். அதுமட்டுமல்லாமல் குறுகிய காலத்தில் கடனை திருப்பியளிக்க வேண்டுமென்றும் சீனா ஒப்பந்தம் செய்திருக்கிறது. அப்படித் திருப்பிச் செலுத்தத் தவறினால் நாட்டின் ஒரு பகுதியை சீனாவின் பெயருக்கு மாற்றி எழுதும் அளவுக்குக்கூடச் செல்லலாம். அல்லது கொழும்பு துறைமுக நகரத்துக்காகப் போடப்பட்ட ஒப்பந்தத்தைப்போல. பல்வேறு ஒப்பந்தங்களைப் போட வேண்டிய சூழலுக்கு இலங்கை தள்ளப்படும் நிலை ஏற்படும்.

மஹிந்த ராஜபக்ச உட்பட அவரது சகோதரர்களின் சீன சார்பு செயற்பாடுகளானது நாட்டில் பாரிய சிக்கல்களையும் புதிய புதிய பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு சீன சார்பும் ஒரு காரணம் தான் எனக் கூறப்படுகின்றது. அரசின் முறையற்ற அபிவிருத்தித் திட்டங்களால் இலங்கை மக்கள் இன்று பாதிக்கப்பட்டுள்ளதோடு இப்பாதிப்பு இனிவரும் தலைமுறையினரையும் தொடரப்போகின்றது. நாட்டின் அரசியல்வாதிகள் சீனா சார்பான ஆட்சி தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளனர். நாட்டின் உற்பத்திக்குகுந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளை இன்றைய அரசு செய்கின்றது என குற்றம் சாட்டப்படுகின்றது. உள்ளூரில் உர இறக்குமதிக்கு தடையினை விதித்துவிட்டு வெளிநாடுகளிடமிருந்து அரிசியினை இறக்குமதி செய்யும் நிலை உருவாகியுள்ளது. சீனா விரும்புவதும் இதனைத்தான். தெரிந்தோ தெரியாமலோ இலங்கை சீனாவின் வாலைப் பிடித்துவிட்டது. இன்று. பிடித்த வாலை திடீரென விடவும் முடியாமல் திணறும் நிலை இன்றைய அரசுக்கு மாத்திரமல்ல. இனிவரும் அரசுகளுக்கும் தொடரப்போகின்றது என்பதுதான் உண்மை.

**நெற்றிப்பொறியன்**

# யார் தமிழினத் துரோகிகள்?



இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஆயுத வன்முறையற்ற அரசியல் வடிவிலான போராட்டங்களே இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

தமிழினப்போராட்டம் என்பது மூன்று தசாப்த காலங்களுக்குள் காட்டிக்கொடுப்புடன் முற்றுகைக்கு கொண்டுவரப்பட்டது. அதன் ஒரு கட்டமாக ஈ.பி.டீ.பி. ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ. புளொட். கருணா என்று அந்த வரலாற்று துரோகம் நீண்டுகொண்டே செல்கின்றது. குறிப்பாக தமிழ் மக்கள் மீது அக்கறையற்ற நிலையில் செயற்படுகின்ற எந்த ஆயுத கட்சிகளும் தமிழின துரோகிகளாகவே கருதப்படுவார்கள்.

இந்திய இராணுவம் வந்திறங்கிய காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ. புளொட் போன்ற இயக்கங்கள் தமிழினத்தை காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளில் இறங்கியிருந்தனர். அதே போன்று ஈ.பி.டீ.பி அதன் பின்னர் கருணா இவர்களும் ஈழக்கனவை சிதைக்கும் வகையில் செயற்பட்டிருந்தார்கள் என்பதே வரலாறு. இவ்வாறான சூழலில் மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்கள் இவர்களை பயன்படுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பின் நட்பெயருக்கு கலங்கத்தை ஏற்படுத்தி அவர்களை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதற்கான அனைத்து திட்டங்களையும் தற்பொழுதும் திரைமறைவில் மேற்கொண்டுவருகின்றனர். ஒரு வித்தியாசமான காலகட்டத்தை தமிழினம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

புராதன நூற்றாண்டுகளிலும் சங்ககால இலக்கியங்களிலும் தமிழர்களின் வீரம் கொட்டிக்கிடக்கும் வரலாற்றை நாம் படித்திருக்கின்றோம். கல் தோண்றி மண் தோன்றா காலத்திற்கு முன்பே தோன்றிய மூத்த குடியாக தமிழ் குடி உலகத்தின் ஒரு மூளையில் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். கட்டப்பமுனை காட்டிக்கொடுத்த எட்டப்பனை போன்று இன்னமும் தமிழர் தாயக கனவை ஏமாற்றி பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகளும் இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் களைபிடுங்கப்பட வேண்டியவர்கள்.

தமிழ் தமிழ் என்று சொல்லி வயிறு வலுத்துவந்த தமிழ் காவலர்கள் இன்று பதவிக்காக தமது தொப்புள்கொடி உறவுகளை மறந்து அவர்கள் கொத்து கொத்தாக கொலை செய்யப்படுகின்ற பொழுது மௌனம் காத்திருந்தார்கள். இவர்களும் துரோகிகளே. வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை பெற்றுத்தருகின்றோம் என கூறிய இந்திய அரசு 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வந்திறங்கியது.

பின்னர் ரஜீவ் காந்தி கொலையுடன் விடுதலைப்புலிகள் தொடர்புபட்டிருந்ததாக கருதி விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது இந்தியா தடை விதித்திருந்தது. இன்றும் அந்த தடை தொடர்கின்றது.

சுயலாப அரசியலுக்காக இந்தியா செயற்பட்டது என்பது மற்றுமொரு துரோகத்தனத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. மூன்று தசாப்த காலங்களாக நிகழும் உள்ளாட்டு தீர்வுக்காக தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் போலி பிரச்சாரங்களை மேற்கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தருகின்றோம் என கூறி நயவஞ்சகமாக ஏமாற்றி சிறிமாவோ பண்டாரநாயக்க தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை ஏமாற்று அரசியலையே செய்துவருகின்றார்கள்.

இதற்கு தற்பொழுதும் துணை போய்க்கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல் கொடுக்கின்றோம் என கூறிக்கொண்டு போராட்டத்தை காட்டிக்கொடுத்து தற்பொழுதும் தமது சுயலாப அரசியலுக்காக செயற்படுகின்ற இந்த இயக்கங்கள் நவீன யுகத்தில் சிந்திக்க தவறின் மீண்டும் தமிழினம் அடிமை கொண்ட இனமாக தள்ளப்படுவதில் மாற்றுக்கருத்தில்லை. அரசாங்கம் கூறுகின்ற போலி வாக்குறுதிகளை நம்பி அதனை தமிழ் மக்களிடையே கொண்டு செல்லுகின்ற துருப்பு காவிகளாக குறித்த இயக்க தலைவர்கள் செயற்பட்டுவருகின்றமை கவலைக்குறியது. ஆனால் உள்ளே மிருகம் வெளியே கடவுள் என்பதுமாய் போல் பின் வாசல் வழியால் அரசாங்கத்துடன் நம்புறவை வைத்துக்கொண்டு தொடர்ந்தும் தமிழினத்திற்கு ஏமாற்றத்தை ஏற்படுத்திவருகின்றார்கள். ஆயுத பேராட்டத்தினுடனான எமது வெற்றி இலக்கு தவறிய நிலையில் அகிம்சை ரீதியான போராட்டங்களை முன்னெடுத்தாவது அதனோடு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டில் இருக்க தற்பொழுது தமிழ் கட்சிகளை சின்னா பின்னமாக உடைப்பதற்கான ஏஜன்டுகளாக குறித்த கட்சியினர் பயன்படுத்தப்பட்டுவருகின்றார்கள். மக்கள் மத்தியில் ஒரு வெறுப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இவர்கள் அடுத்த தேர்தல் களத்தில் வெல்ல முடியாத சூழல் ஏற்படும் அப்பொழுது இவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாது தோல்வியை தழுவிக்கொள்வார்கள். இதனை சாதகமாக அரச தரப்பு பயன்படுத்திக்கொள்ளும். 22 ஆசனங்களை தன்னகத்தே கொண்டிருந்த த.தே.கூ இன்று 12 ஆசனங்கள் இழந்த நிலையில் தனது அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றது.

தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பவற்றை இலக்காகக்கொண்டு இவர்கள் பயணித்தாலும் திரைமறைவில் அரசாங்கங்களின் ஒப்பந்தங்களுக்கு இறையாகிவிடுகின்றார்கள் என்பதே இன்றைய யதார்த்தபூர்வமான உண்மை. காலத்தின் தேவை கருதி தமிழ் தரப்பு செயற்பட தவறும் பொழுதே இவர்கள் தமிழின துரோகிகளாக மாறிவிடுகின்றார்கள். மேற் குறிப்பிடப்பட்ட தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தம்மை ஒருமுறை சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். துரோகத்தின்பால் இடம்பெற்ற சகோதரப்படுகொலை அதனூடாக தமிழர் தாயகம் என்ற கனவு அடையமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டது. மீண்டும் தமிழ் தரப்பு ஆயுத கட்சிகள் பிரிந்து செயற்படுவது என்பது மற்றுமொரு நிர்ப்பந்தமான நிலைமையை தோற்றுவிக்க வாய்ப்புக்கள் இருக்கின்றது. அடம்பன் கொடியும் திரன்டால் மிடுக்கு என்ற பழமொழிக்கமைய இக் கட்சிகள் தொடர்ந்து செயற்படுவதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான இலக்கை அடையமுடியும். ஒவ்வொரு வருட முடிவிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என்று த தே கூ தலைவர் சம்பந்தன் அவர்களால் கூறப்படுகின்றது. அதுபோன்று ஏனைய கட்சி தலைவர்களும் மாற்று வழியை கையாள்வதன் ஊடாக தமிழ் மக்களின் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறிவருகின்றார்கள். த தே கூட்டமைப்பிலிருந்து விலகி சுயமான கட்சியை ஆரம்பித்துள்ளார்கள். 13 ஐ எதிர்கின்றா தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மாகாணசபையில் போட்டியிடுவதற்கு தயாராகிவருகின்றனர். இதுவும் ஒரு வேடிக்கையான விடயமே.

மக்கள் மத்தியில் தமிழ் கட்சிகள் ஒரு ஸ்திரமற்ற கட்சிகள் என நிருபிப்பதற்காக அரசாங்கம் தமிழ் தரப்பிலிருந்து ஒருசில புத்திஜீவிகளையும் மற்றும் கொலை கொள்ளை போன்ற வன்முறைகளில் ஈடுபட்டவர்களையும் வன்முறை ரீதியாக களமிறக்கியுள்ளது. இவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணி என்றவென்றால் எவ்வாறு தமிழ் கட்சிகளை சீர் குழைப்பது என்பதே. அதனை கட்சிதமாக செயற்படுத்தியும் வருகின்றார்கள். விலை கொடுத்து வாங்கும் செயற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றது. குறிப்பாக ரெலோ. புளொட். ஈ.பி.ஆர். எல்.எப். ஈ.பி.டீ.பி போன்ற ஆயுத கட்சிகள் தமிழினத்திற்கு எதிராகவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டது ஒரு காலம்.

பின்னர் ரெலோ. புளொட். ஈ.பி.ஆர்.எல். எப் தமிழ்கட்சிகளும் இணைக்கப்பட்டு செயற்பட்டதன் ஊடாக ஒரு சுபீட்சமான முடிவையடைய முடிந்தது. ஆனாலும் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தின் பின்னர் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட கையோடு தமிழின விடுதலைப்புலிகளின் தலையீடு இல்லாத காரணத்தால் அவர்களால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பை சிதைப்பதோடு அவர்களை குறைந்தபட்சம் பாராளுமன்ற உறுப்பினர்களாக கூட தெரிவு செய்வதற்கு குறித்த த.தே.கூ ஆசனங்களை கூட வழங்கவில்லை. இன்றைய சூழலில் மீண்டுமொரு ஐக்கியத்தை உருவாக்கி இந்தியாவின் கைப்பொம்மைகளாக செயற்படுவதற்கு ரெலோ அமைப்பு ஒரு செயற்பாட்டை முன்னெடுத்தது அது தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்பட்ட கடிதம். இந்திய அரசு கூட இலங்கைதீவில் அமைதிப்படை என கால் பதித்து அப்பாவி பொது மக்களை கொன்று குவித்தது. கோப்பாய். உரும்பிராய் போன்ற பகுதிகளில் தரையில் மக்களை படுக்க வைத்து செயின்புளொக் கனரக வாகனத்தினால் நெரித்துக்கொன்றார்கள். இவ்வாறு பல சம்பவங்கள் இருக்கின்றன.

எனவே இந்த வரலாறு அனைத்தும் நாம் அறிந்த விடயங்களே. மக்களுக்காக செயற்படுவோம் என கூறிக்கொண்டிருக்கும் குறித்த தமிழ் ஆயுத கட்சிகள் இனியாவது இவர்களின் ஏமாற்று அரசியலுக்கு விலைபோகாது செயற்பட வேண்டும். வினைத்திறனற்ற முடிவுகளை எடுப்பதன் மூலம் அதன் அறுவடையை சரியான விதத்தில் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும். காலத்தின் தேவை கருதி துரோகிகளாக இனங்காணப்பட்ட இவ் ஆயுதக்கட்சிகள் ஒரு குடையின் கீழ் செயற்படுவது வரவேற்கத்தக்கது.

ஆனால் எம் இனத்தை எம் இனமே காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளை இனியாவது தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிங்கள தேசத்தை பொறுத்தவரையில் அவர்கள் பாராளுமன்றத்தில் அமளி துமளியாக பேசினாலும் அதற்கு பின்னர் அவர்களின் ஒற்றுமை என்பது வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை தமிழினத்திற்கு கொடுக்க கூடாது என்பதில் ஒன்றிணைந்து நிற்கின்றார்கள். இன்று தமிழினத்தை ஆதரித்து பாராளுமன்றத்தில் பேசுகின்ற சரத்போன்சேகா. சஜித் போன்ற இன்னும் பல அரசியல்வாதிகள் ஒருகாலத்தில் தமிழினத்தை ஈவிரக்கம் இன்றி கொன்றவர்கள். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இலட்சகணக்கான மக்கள் கொன்று குவிக்க கண்மூடிக்கொண்டிருந்த குறித்த சிங்கள அரசியல்வாதிகளும் அரசியல் தலைமைகளும் எமக்கான தீர்வை பெற்றுத்தரப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது.

எனவே அரசியலுக்காக எவற்றையும் மாறி மாறி மக்கள் மத்தியில் பேசலாம். இனியாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு துரோகங்களை களைந்து அரசிற்கு எதிரான அரசியல் போராட்டங்களில் குறித்த ஆயுத கட்சிகள் களமிறங்குவதன் ஊடாகவே எமது மக்களுக்கான தீர்வின் இலக்கை அடைய முடியும் என்பது இன்றைய யாதார்த்தம்.

**சுழியோடி**

# சர்வதேச விசாரணைகள் சாத்தியமாகுமா?




ஈழத் தமிழர்களின் வாழ்வில் சர்வதேசவிசாரணைகள் என்பது வெறுமனே ஒரு பேசுபொருளாக மாத்திரமே இருக்கிறது. இந்த சர்வதேச விசாரணைகள் ஏன் ஈழத் தமிழர்களால் வலியுறுத்தப்படுகின்றது என்கிற விடயம் தொடர்பில் அன்றிலிருந்து இன்றுவரை இலங்கையில் வாழ்கின்ற பெரும்பான்மை சிங்கள மக்களும். அவர்களை வழிநடத்திச்செல்கின்ற இலங்கையின் பௌத்த பீடங்களும். சிங்கள அரசியல்வாதிகளும் எப்போதுமே நழுவிப்போகின்ற அல்லது கண்டும் காணாமல் போகின்றதானதொரு நிலைப்பாட்டினையே கொண்டுள்ளனர். அவர்கள் தமக்கென இலங்கையில் ஒரு நிகழ்ச்சிநிரலை தமிழ் மக்களுக்கு எதிராகவும். முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும் வரையறுத்து அதற்கிணங்க திறம்பட செயற்பட்டும் வருகின்றனர் என்பது. தமிழ் - முஸ்லீம் மக்களுக்கு எதிராக இலங்கையின் ஆட்சியாளர்களாலும். இனவாதப்போக்குடையவர்களாலும். அரச கைக்கூலிகளாலும் இன்றுவரை இழைக்கப்பட்டுவரும் இன்னல்களை அடிப்படையாக வைத்து யாராலும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

முதலில் இந்த சர்வதேச விசாரணைகளை ஈழத்தமிழர்கள் கட்டாயமாக வலியுறுத்தக் காரணம் தான் என்ன என்கின்ற விடயத்தை நாம் பார்க்கவேண்டும். அதாவது இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு இன்றுவரை இலங்கையின் பௌத்த பெரும்பான்மையினர்களால் தமிழ் மக்கள் பல்வேறு கொடுமைகளை சந்தித்துள்ளனர். இந்நிலை இன்றுவரை தொடர்கின்றது. கடந்த 30 வருட காலத்திற்கும் மேலான அஹிம்சைமற்றும்ஆயுதப்போராட்டங்களால் தமிழினம் சொல்லொனாத் துன்பங்களை எதிர்கொண்டது. பல இலட்சக்கணக்கில் உயிர்களை பலிகொடுத்தும். உடைமைகளை இழந்தும். சகோதரர்களை. உறவினர்களை. பெற்றோர்களை என அநாதரவாகி வீதிகளில் நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும். அவயவங்களை இழந்து தமது எதிர்கால வாழ்வை மாத்திரமல்ல நிகழ்கால வாழ்வைத் தொலைத்தவர்களாக இன்றும் தமக்கான நீதியினைக் கோரி வீதிகளில் போராடி வருகின்றனர்.

இந்த 30 வருடகால போராட்டத்தில் தமிழ் மக்களுக்காக தமிழ் மக்களது விடிவுக்காக தம் தோள்களில் ஆயுதமேந்திப் போராடியவர்கள் விடுதலைப்புலிகள். அவர்களை ஆயுதமேந்திப் போராடும் நிலைக்குக் கொண்டுவந்ததும் இலங்கையரசுதான். அடக்குமுறைகளுக்கு பதிலாகவே அவர்கள் போராடத் தலைப்பட்டனர். பின்னாளில் அவர்களை வளர்த்ததும் இந்தியா தான். பல ஆயுதக்குழுக்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்காகப் போராடியவர்கள். பின்னாளில் இவர்களில் விடுதலைப்புலிகள் மாத்திரம் இறுதிவரை இலங்கை அரசுக்கு எதிராக போராடி சர்வதேச நாடுகளின் உதவியுடன் மௌனிக்கப்பட்டார்கள்.

தமிழ் மக்கள் கோருகின்ற நீதியினை குற்றமிழைத்தவர்களால் வழங்க முடியாது என்கின்ற காரணத்தினால் தான். இலங்கை அரசு கூறிவரும் உள்ளக விசாரணையையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சர்வதேச விசாரணையின் மூலமாகத்தான் தமிழ் மக்களுக்கானத் தீர்வினை வழங்க முடியும். சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் குற்றமிழைத்தவர்கள் என அடையாளங்காட்டப்படுபவர்கள் நிறுத்தப்படவேண்டும் என்கிற கோரிக்கையிலிருந்து இன்றுவரை தமிழினம் பின்வாங்காமல் வலியுறுத்தி வருகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த சர்வதேச விசாரணைகளுக்காக தமிழினம் ஐ.நாவை ஒருபோதும் நம்பியிருக்க முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். ஏனெனில் இலங்கையரசுக்கு யுத்த காலத்தில் உதவிகளைச் செய்ததே இந்த ஐ.நாவில் அங்கம் வகிக்கும் சர்வதேச நாடுகள் தான். ஆதலால் ஐ.நாவில் எத்தகைய தீர்மானங்களைக் கொண்டுவருகின்ற போதிலும் அது இலங்கையரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கும் ஒன்றாக அமைவது மிகக் கடினம். பேச்சளவில். அறிக்கையளவில் விடயங்கள் இருக்குமே தவிர. செயற்பாட்டளவில் ஒன்றும் நடைபெறாது. உண்மையில் தமிழ் மக்களது பிரச்சினைகள் ஐ.நா மனித உரிமைச் சபையில் இருந்து சர்வதேச நீதிமன்றத்திடம் பாரப்படுத்தப்படவேண்டும். ஐ.நாவின் பாதுகாப்புச் சபையிலும் இலங்கை. வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளின் உதவியுடன் காப்பாற்றப்படக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இலங்கை சார் சர்வதேச நாடுகள் தமது சுயலாபத்திற்காக. இலங்கையரசுக்கு சர்வதேச அளவில் ஒரு பிரச்சினை வருகின்றபோது இலங்கையைக் காப்பாற்றவே துணை நிற்பார்கள்.

தன்னாட்சி உரிமை அல்லது சுயநிர்ணயம் (Self-determination) எனப்படுவது சுயமாக. சுதந்திரமாக ஒரு மக்கள் குழு தமது அரசியல் ஏற்பாட்டை தீர்மானிக்கும் உரிமையைக் குறிக்கின்றது. தன்னாட்சி உரிமை என்ற சொற்றொடருக்கு பதிலாக சுயநிர்ணய உரிமை என்ற சொற்றொடரும் பயன்பாட்டில் உண்டு. வெளி வற்புறுத்தல்கள் இன்றி ஒருவர் தனது செயல்பாடுகளைத் தானே தெரிவு செய்துகொள்வதற்கு. சிறப்பாக. ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தமது சொந்த அரசியல் நிலையை முடிவு செய்து கொள்வதற்கு அல்லது தமது தற்போதைய நாட்டில் இருந்து விடுதலை அடைவதற்கு. அவர்களுக்கு உள்ள சுதந்திரமே தன்னாட்சி உரிமை என்பதன் வரைவிலக்கணம் ஆகும். இதனடிப்படையிலே தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகள் முன்னகர்த்தப்படவேண்டும்.

தமிழர் தரப்பின் இந்த இணக்கப்பாட்டுக் கோரிக்கையில். "பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையை இணங்க வைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு கடந்த பத்து ஆண்டுகளாக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் போதும். எதனையும் இலங்கை செய்யப்போவதில்லை. இனியும் இதில் மனித உரிமைகள் பேரவையில் சாதித்துச் செயலாற்றுவதற்கு எதுவுமில்லை. ஆகவே காலத்தை மேலும் வீணடிக்காமல். விடயத்தை ஐ.நா பொதுச் சபையிடமோ. பாதுகாப்புச் சபையிடமோ. சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றத்திடமோ கையளிக்க நடவடிக்கை எடுங்கள்" என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தக் கோரிக்கை மிகவும் நியாயமானதும். காலத்துக்குப் பொருத்தமான ஒன்றுதான். கடந்த பல வருடகாலமாக ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களினால் மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்திவிட முடியவில்லை. தீர்மானங்கள் கொண்டுவரப்படும்போது அதற்கு இணை அனுசரணை வழங்குவதாகக் கூறி. களத்தில் இறங்கும் இலங்கைத் தரப்பு. தீர்மானத்தில் இருக்கக்கூடிய கடுமையான தன்மையைக் குறைப்பதில்தான் வெற்றி பெறுகின்றது. பின்னர் அதனைக்கூட இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதில்லை. அதனால். நிலைமாறுகால நீதி என்பது தமிழர்களுக்குக் கிட்டாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

ஜெனீவாவில் நிறைவேற்றப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் நிறைவேற்றுவதற்கு. குறிப்பிட்ட நாட்டின் ஒத்துழைப்பு - இணக்கப்பாடு அவசியம். இலங்கையின் ஒத்துழைப்பு இல்லாத நிலையில். அதனை நிறைவேற்றச் செய்வதற்கான பொறிமுறை எதுவும் ஜெனீவாவிடம் இல்லை. அதனை இலங்கை தனக்கான வாய்ப்பாகவே இதுவரையில் பயன்படுத்தி வந்திருக்கின்றது.

வெறுமனே ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் இருந்துகொண்டு எதனையும் சாதிக்க முடியாது என்ற கருத்து வலுவடைவதற்கு இதுதான் காரணம். அதனால்தான் "பிரச்சினையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லவேண்டும்" என்ற கருத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் தொடர்ச்சியாகவலியுறுத்தப்பட்டுவருகின்றது. இலங்கையை இனப்படுகொலை. மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள். யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக்கூடியதுமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ.நா.பொதுச்சபை. ஐ. நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்கவேண்டுமென்று உறுப்பு நாடுகள் வலியுறுத்தவேண்டும். ஆனால் இதனைச் செய்வதற்கு ஐ.நாவின் எத்தனை உறுப்பு நாடுகள் இன்று தயாராகவிருக்கின்றன.

201 ம் ஆண்டுக்கு பிறகு அரசாங்கத்தின் எதிர்ப்பையும் மீறி. யு.என்.எச்.ஆர்.சி இலங்கை மீது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இது முதல் தடவையாகும். ஐ.நா மாநாட்டில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் முதல் தோல்வி இதுவாகும். இந்த தீர்மானம் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு இலங்கையில் போர்க்குற்றங்கள் பற்றிய தகவல்களை சேகரித்து பாதுகாக்க உதவும். நாட்டில் எதிர்கால மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்களை சேகரிக்க ஐ.நா பொதுச் சபை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 22 வாக்குகள் கிடைத்தன. ஆர்ஜென்டீனா. மெக்சிகோ மற்றும் உருகுவே போன்ற தென் அமெரிக்க நாடுகளுடன் ரஷ்யா. பாகிஸ்தான். சீனா. பங்களாதேஷ் உள்ளிட்ட 11 நாடுகள் இந்த நடவடிக்கையை எதிர்த்தன.

அண்மைக்காலங்களாக இலங்கை தொடர்பாக சர்வதேச நாடுகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் சற்று வித்தியாசமாகக் கையாளப்படுகின்றது. இவர்களது போக்கு புதிய ஆட்சி தொடர்பிலானதாக இருக்கிறது. இவ்வாட்சியை அப்புறப்படுத்தும் நோக்கில் சர்வதேச ரீதியிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்கிற கேள்வியும் எழுகின்றது. அதேவேளை ஜெனீவாவில் தமிழ் மக்களுக்கு சாதகமான விடயங்கள் நடந்தாலும் எதுவித பிரயோசனமுமில்லாமல் தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. தமிழினம் வலியுறுத்தும் சர்வதேச விசாரணை என்பது சாதாரணமான விடயமொன்றல்ல. இலங்கை வாழ் தமிழ் மக்களும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் சர்வதேச விசாரணையின் பின்புலத்தில் இன்னும் கடினமாக ஒற்றுமையுடன் உழைக்கவேண்டிய சூழல் இருக்கிறது. 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில். குறிப்பாக மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் நிலைமாறுகால நீதி என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட வேலைத்திட்டங்களால் அதிகம் பயன் பெற்றவர்கள் ஈழத் தமிழர்கள் அல்ல. ஆனால் தங்களைத் தாங்களே நல்லாட்சி என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் மூன்று மாதங்களிலேயே நிலைமாறுகால நீதி என்ற விடயத்தில் முரண்பட ஆரம்பித்தது. ஆக. 19ஆவது திருத்தச் சட்டம் மாத்திரமே அவர்கள் செய்த சாதனை. அதுவும் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பது என்ற போர்வையில் இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பைப் பலப்படுத்துவதே இவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது. எழுபது ஆண்டுகால ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் முப்பது ஆண்டுகள் நடந்தது ஆயுதப்போர். 1983இல் போர் மூளுவதற்கு முன்னரே ஈழத்தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படுவது இனப்படு கொலைதான் என்று வ.நவரட்ணம். தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகிய தமிழ்த் தலைவர்கள் குறிப்பிட்டுக் கூறியமைக்கான ஆதாரங்கள் உண்டு. அவர்கள் உணர்வு ரீதியாக அவ்வாறு கூறவில்லை. அறிவுசார்ந்தே அதனை வெளிப்படுத்தியிருக்கின்றனர் என்று பிற்காலத்தில் எழுதிய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுமிருக்கின்றனர். ஆகவே. நடந்தது இனப்படுகொலைதான் என்றும் சுயநிர்ணய உரிமைதான் அரசியல் விடுதலை எனவும் குறிப்பிட்டுக் கூறி முடிவெடுக்கும் உரித்துடையவர்கள் ஈழத்தமிழர்கள்.

சர்வதேச விசாரணையைக் கோரி வரும் தமிழ்த் தரப்பினர் மத்தியில் குறைபாடுகளும் இல்லாமலில்லை. இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையில்லை என்பதே மிகப்பெரிய குறைபாடாகவுள்ளது. மலையக வாழ் தமிழ் மக்கள். வடகிழக்கு வாழ் தமிழ் மக்கள் இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற்கட்சிகள் அனைத்தும் கடந்தகால கருத்து மோதல்களை மறந்து. ஓரங்கட்டிவிட்டு. தமிழினத்தின் விடிவுக்காக ஒன்றிணைந்து செயற்படுமிடத்து. சர்வதேச விசாரணை நோக்கிய எமது இலக்கில் தமிழினம் வெற்றியடைவது உறுதி.

**மறவன்**

# “13வது திருத்தச்சட்டமும், மாகாண சபைத் தேர்தலும்” நடப்பது என்ன? - மாவை சேனாதிராஜா



**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய விசேட நேர்காணல்.**

**கேள்வி : மாகாணசபைத் தேர்தல் எந்த வகையில் சாத்தியமாகும், 13 ஆம் திருத்த சட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா?**

**பதில்** : தற்பொழுது பதிலளித்திருக்கிறார்கள் தானே. அதற்கான திருத்தச்சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். பாராளுமன்றத்தில் அதற்கான திருத்தச்சட்டத்தை கொண்டுவர வேண்டும். அவ்வாறு அதனை கொண்டு வந்ததன் தங்களை தாங்களே ஆளுகின்ற அரசியல் முறைமை வரவேண்டும். தமிழ் மக்களுக்கு முழுமையான அதிகாரமுள்ள மாகாண சபையாக வரவேண்டும். ஆனால் இவர் கொண்டு வந்தாலும் அதிகாரங்கள் பறிக்கப்படக்கூடிய சாத்தியம் ஒற்றையாட்சிக்குகீழேஇருக்கின்றது. அப்படி நடந்தது தானே. திடீரென சட்டமூலம் கொண்டு வந்த போது சுப்ரின் கோர்ட்டில் அதை எதிர்த்து என்னுடைய பெயரில் தான் அந்த வழக்கு நடந்தது. மாகாண சபைக்கு இருக்கின்ற அதிகாரத்தை திருப்பி எடுப்பதற்கு பிரேரணை வந்த பொழுது சுப்ரின் கோர்ட் எங்களது வழக்கில் அதை தடுத்தது. ஆனால் பின்னர் 2/3 பெரும்பான்மைய பயன்படுத்தி அதை நடைமுறைக்கு கொண்டுவந்தவிட்டார்கள்.

பின்னர் தான் மாகாணசபைத் தேர்தல் நடக்கும். நாங்கள் அதனை உறுதியாக சொல்ல மாட்டோம் அரசாங்கம் நடத்தும் என்று. இந்தியாவினுடைய நெருக்கடிகள் இருந்தால் அல்லது அவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள், தேர்வுகள் இருக்கும் என்று நினைத்தால் தான் அவர்கள் அதனை செய்வார்கள். அதற்காக அவர்கள் மாகாணசபைச் சட்டத்தையே இல்லாமல் செய்வதற்கு தான் விரும்புவார்கள். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் தங்களுக்கு ஒரு பிரச்சினையான ஒப்பந்தமாக நினைக்கின்றார்கள். மற்றும் நாட்டின் சூழல் கொரோனா வைரஸ் தற்பொழுது அது திரிபு அடைந்து ஒமிக்ரோன் மற்றும் வேறு பெயர்களிலுமான கொரோனா வைரஸ் தொற்றும் பரவுகின்றது. அதைக் காரணம் காட்டி பொதுத் தேர்தல் நடத்த முடியாது என்று சொல்லமாட்டார்கள். ஏனைய நாடுகளிலும் அந்த நடைமுறைகள் இருக்கின்றது தானே. பல நகரங்களிலும் தற்பொழுது பல தடைகள், ஊடரங்கு விதியை விதிக்கின்றார்கள். இனி என்ன மாதிரி இருக்கப்போகின்றது என்று தெரியவில்லை. மற்றும் அரசாங்கம் நினைத்தால் தற்பொழுது கொரோனா வைரஸ் திரிபடைந்துவிட்டது என்பதால் ஊடரங்கு முறையை விதித்தால் அதை செலஞ்ச் செய்ய முடியாது.

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பு இது தொடர்பாக எதனை வலியுறுத்தும் என்று கேட்டால் எவ்வாறு கூறலாம்?**

**பதில்** : நாங்கள் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்கின்றோம். மற்றும் பாராளுமன்றத்திலும் அது சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தியாவிடமும் தேர்தலை வைக்கவேண்டும் என்று சொல்கின்றோம் மற்றும் 13 ஆம் திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அது எங்களுடைய அரசியல் தீர்வுக்கு முழுமையானதல்ல.

ஆனால் சமஷ்டி கட்டமைப்பு தான் எங்களது இறுதி இலக்கு அல்லது இலட்சியம். அதை மக்கள்

எனவே 13 ஆம் திருத்தச்சட்டம் அப்படிப்பட்ட பலவீனங்கள் இருக்கின்ற ஒரு நடைமுறை தான். அவற்றையெல்லாம் மாற்றியமைத்து முழுமையாக அதிகாரங்களை 13 ஆம் திருத்த சட்டம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் ஒரு அங்கமாக இனப்பிரச்சினை தீர்வுக்கு இதை நாங்கள் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் 13 ஆம் திருத்தச்சட்டம் வந்தாலும் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி மாகாணசபைத் தேர்தலும் வந்திருக்கவில்லை. அதனால் தான் நாங்கள் அதற்கு அதிகாரம் போதாது பறிப்பதற்குரிய சந்தர்ப்பம் இருக்கின்றது ஒற்றையாட்சிக்கு கீழ் அதிகாரத்தை பகிரமுடியாது என்று உடனடியாக 1987 ஆம் ஆண்டு ரஜீவ் காந்திக்கு எங்களது தலைவர்கள் எழுதினவர்கள் தானே. தற்பொழுது 35 வருடங்களுக்கு பின்னர் அதுதான் எங்களுக்குவேண்டும்என்றுசொல்லி கேட்கும் அந்த நிலைமையை தோற்றுவிக்கக்கூடாது.

அது அரசியலமைப்பிலேயே இருக்கின்றது. அதை நடை முறைப்படுத்த வேண்டும் என்று கேட்பதற்கு பதிலாக அரசியலமைப்பு தற்பொழுது ஒவ்வொரு அரசாங்கமும் ஆட்சிகளுக்கு வரும்பொழுது புதிய அரசியலமைப்பு செய்யப்போகின்றோம் என்று தானே கொண்டுவருவது. தற்பொழுது இந்த அரசாங்கமும் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கப்போவதாக சொல் கின்றார்கள். அதில் இந்த 13 ஆம் திருத்த சட்டமும் இருந்த பொழுதிலும் இந்திய பிரதமர் மோடி மார்ச் மாதம் 13 ஆம் திகதி 2015 வந்து பாராளுமன்றில் பேசும் பொழுது அவர் கூறியது இவ்வாறான பிரச்சினைகள் இருக்கின்ற இடத்தில் தனக்கு கூட்டுறவு முறையான சமஷ்டி முறை தான் சிறந்தது அதுதான் தன்னுடைய விருப்பம் என்றும் சொல்லியிருக்கின்றார். ஏற்கனவே இருப்பதை நடைமுறைப்படுத்துங்கள் என்று ஒரு பகுதி சொல்கின்றார்கள். நாங்கள் அடையவேண்டிய இலட்சியம் முழுமையாக ஒரு ஒற்றையாட்சி இல்லாத சமஷ்டி கட்டமைப்பில் உள்ளக செயலணி முறையில் முழு அதிகாரங்களும் பகிரப்பட்டு ஒரு ஆட்சி முறை வேண்டும் என்பதை வலியுறுத்தி நாங்கள் சொன்னோம். அது தான் எங்களுடைய இலக்கு. ஆனால் இருக்கும் 13 ஆம் திருத்த சட்டத்தையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதை நாங்கள் வற்புறுத்தியிருக்கின்றோம்.

**கேள்வி : ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அரச தரப்பு இதுவரையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உத்தியோகபூர்வமாக தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் தொடர்பில் பேசப்படவில்லை என்னும் ஒரு கருத்து நிலவுகின்றது. அதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

**பதில்** : அது உண்மை. அதைப்பற்றி இன்னும் பேசவில்லை. நாங்கள் அதை பேசுவதை பற்றி பேசியிருக்கின்றோம். விரைவில் பேசுவோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் அது இன்னும் நடக்கவில்லை. மற்றும் புதிய அரசியலமைப்பிற்கான பிரேரணை ஒன்றை அவர்கள் முன்வைக்கப்போகின்றார்கள் என்று கூறப்படுகின்றது. ஆனால் அவர்கள் நியமித்த ஆணைக்குழுவிற்கு முன்னால் எங்களது இலக்கு என்னவென்று சொல்லியிருக்கின்றோம். உள்ளக செயலணி அடிப்படையில் பூரணமான சமஷ்டி அதிகாரங்கள் பகிரக்கூடியதான ஒரு கட்டமைப்பு மற்றும் உள்ளக செயலணி மூலம் அரசியலமைப்பு தீர்வு இல்லாவிட்டால் அரசியல் தீர்வு வராவிட்டால் நாங்கள் வெளியக செயல்திறனை பாவிப்பதற்கு அந்த அரசியல் பிரேரணையை நாங்கள் ஆணைக்குழுவிற்கு முன்னால் வைத்திருக்கின்றோம். அதை இந்தியாவிற்கும் சொல்லியிருக்கின்றோம், இலங்கை அரசாங்கத்திற்கும் சொல்லியிருக்கின்றோம், எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் நாங்கள் ஒரு பேச்சுவார்த்தையை அரசாங்கத்துடன் நடத்துவதற்கு அவர்கள் சம்மதித்தால் நாங்கள் பேசுவோம்.







# பிராந்திய செய்திகள்



## டெங்கு நோயை தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம்

நாட்டில் டெங்கு நோய் அதிகரித்து வருவதால் அனைத்து அரச நிறுவகங்களின் பங்களிப்புடன் நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக வெற்றிகரமான இணைந்த வேலைத்திட்டம் ஒ ன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி செயலகம் தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் 5 மில்லியன் பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றம்

*கடந்த (26) மாத்திரம் இலங்கையில் பைசர் தடுப்பூசி 30,325 பேருக்கு வ ழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.*

*இதனுடன் இதுவரை இலங்கையில் 5 மில்லியன் பேருக்கு பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*




## மாங்குளத்தில் நீதிமன்றம் திறந்து வைப்பு

*முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நீதிமன்ற கட்டடத் தொகுதியினை நீதி அமைச்சர் அலி சப்ரி (27) திறந்து வைத்தார். முல்லைத்தீவு மாவட்டம் நிலபரப்பில் அதிகளவான நிலப்பரப்பாக காணப்படுகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு மக்கள் மிகுந்த தூரங்களில் இ ருந்து வருகை தரும் போது அவர்களுடைய வழக்குகள் கூப்பிடப்பட்டு அ வர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சம்பவங்கள் போன்ற பல்வேறு ப ாதிப்புகளை கருத்திற்கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் நீதிமன்றத்தில் க டமையாற்றிய அதிகாரிகளின் அயராத முயற்சியின் பயனாக முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில் சுற்றுலா நீதிமன்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.*

*ஆரம்பகாலத்தில் துணுக்காய் பகுதியில் இடம்பெற்ற இந்த நீதிமன்றத்தின் செயற்பாடுகள் காலப்போக்கில் மாங்குளத்தில் நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு வழிவகுத்தது. அந்த வகையிலே மாங்குளத்தில் நீதிமன்ற கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு தற்போது வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும் அங்கு வழக்கு விசாரணைகள் இடம் பெறுகின்றது.*

*குறிப்பாக மாங்குளம், மல்லாவி, ஐயன்கன்குளம், நட்டாங்கண்டல் உ ள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகளில் வருகின்ற வழக்குகள் பு தன்கிழமைகளில் இங்கே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடத் தொகுதியினை வைபவ ரீதியாக நாட்டினுடைய நீதி அமைச்சர் அலி சப்ரி திறந்து வைத்துள்ளார்.*



## பாடசாலைகளில் கொவிட் அவதானம் குறித்து விளக்கம்

*வகுப்பறையில் ஒரு குழந்தையிடம் இருந்து மற்றொரு குழந்தைக்கு கொவிட் பரவும் அபாயம் மிகவும் குறைவு என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.*

*பெரும்பாலான குழந்தைகள் வெளி சமூகத்தில் இருந்தே கொவிட் நோயால் பாதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வகுப்பறையில் ஒரு குழந்தையிலிருந்து மற்றொரு குழந்தைக்கு நோய் பரவும் அபாயம் மிகக் குறைவு. அதேசமயம் வயதான ம ாணவர்களிடையே இது அதிகரிக்கலாம். ஆனால் தற்போது குழந்தைகள் ம த்தியில் நல்ல சூழ்நிலை உள்ளது. 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசியை இலவசமாகப் பெறலாம். இந்த வசதிகள் அனைத்தும் குழந்தைகளிடையே நோய் பரவுவதைக் குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

## கச்சதீவுக்கு இலங்கையர்கள் 500 பேருக்கு மட்டுமே அனுமதி

*யாழ். கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொண்ட 500 பேருக்கு மட்டுமே அனுமதி வ ழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதென கச்சதீவு தூய அந்தோனியார் ஆலய அருட்தந்தை வசந்தன் அடிகளார் தெரிவித்தார்.*

*இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா பேரிடர் நிலைமை காரணமாக இந்திய பக்தர்களுக்கு இம்முறையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இலங்கையை சேர்ந்த 500 பேர் மட்டுமே கச்சதீவு திருவிழாவில் ப ங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருவிழாவில் ப ங்கேற்கும் அனைவரும் பூஸ்டர் டோஸையும் பெற்றிருக்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.*

## தபால் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி டிஜிட்டல் மயப்படுத்த திட்டம்

21ஆம் நூற்றாண்டில் செயல் திறன் மிக்க தபால் சேவையை நடைமுறைப்படுத்தும் நோக்கில், தபால் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அதன் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்க எதிர்வரும் சில மாதங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அரசாங்க த கவல் திணைக்களத்தில் (27) நடைபெற்ற தபால் திணைக்களத்தினால் அஞ்சல் கு றியீட்டு விபரக்கொத்து வெளியீட்டு நிகழ்வில் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விபரக்கொத்தில் ஒவ்வொரு அஞ்சல் அலுவலகத்திற்கும், உப அஞ்சல் அ லுவலகத்திற்கும், ஒரு குறியீட்டு எண் குறிக்கப்பட்டுள்ளன. இதனூடாக கடிதங்கள் மற்றும் பொருட்களை விநியோகிப்பதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்க முடியும் என்றும் அ வர் கூறினார். இலங்கையில், நாடளாவிய ரீதியில் 654 அஞ்சல் அலுவலகங்களும், 3,410 உப அஞ்சல் அலுவலகங்களும் காணப்படுகின்றன. இந்த அனைத்து அஞ்சல் அ லுவலகங்களிலும் கடித பரிமாற்றம் மேற்கொள்ளப்படுவதில்லை. சில அஞ்சல் அலுவலகங்கள் பொருட்களை மாத்திரமே பரிமாற்றம் செய்கின்றன. மேலும் இந்த அஞ்சல் கு றியீட்டு விபரக்கொத்து மூலம் முகவரிகளை கண்டுபிடிப்பதில் உள்ள சிரமங்களும் தவிர்க்கப்படும் என்றும் தபால் மா அதிபர் தெரிவித்தார். இந்த விபரக்கொத்தின் முதல் பதிப்பு 1996 ஆம் ஆண்டு முதலாவதாக வெளியிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு இவ்வருடம் அ ச்சிடப்பட்டு, அதன் முதல் பிரதி வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை அறிமுகம்

**சிறைச்சாலைகளில் ஊழல் மற்றும் முறைகேடுகளை முறியடிப்பதற்கும், இ வற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளை மிகவும் வெளிப்படையான அணுகுமுறையில் கட்டுப்படுத்துவதற்கும் இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை அறிமுகப்படுத்தப்பட்டதாக பாதுகாப்புச் செயலாளரும், ஒழுக்கமான, நல்லொழுக்கமுள்ள ம ற்றும் சட்டங்களை மதித்து நடக்கும் பிரஜைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான ஜெனரல் கமல் குணரத்ன (ஜனவரி 26) தெரிவித்தார்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் கீழ் சிறைச்சாலை ந டைமுறையில் மறுசீரமைப்பை அறிமுகப்படுத்தும் வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக இ லங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை என்ற கருத்தாக்கம் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கொண்டு வரப்பட்டது. மேலும், சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தில் உறுதியளிக்கப்பட்டவாறு பாதுகாப்பான நாடு, ஒழுக்கம், மற்றும் சட்டத்தை மதித்து நடக்கும் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.**

**இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை வீரர்கள் 194 பேர் சிறைச்சாலை சேவையில் இணைவு. பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறுவோரின் மரியாதை அணிவகுப்பில் பாதுகாப்பு செயலாளர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பு.**

**அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் உள்ள திருத்தங்கள் தொடர்பான ஆ ராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெற்ற 'இலங்கை சிறைச்சாலைகள் அவசர ந டவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படையில் பயிற்சிகளை முடித்துகொண்டு வெளியேறும் வீரர்களின் அணிவகுப்பு நிகழ்வில் ஜெனரல் குணரத்ன பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.**

**குறித்த நிகழ்விற்கு வருகை தந்த பிரதம அதிதியான ஜெனரல் கமல் குணரத்னவை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய வரவேற்றார். இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படையில் பயிற்சியினை பூர்த்தி செய்து வெளியேறும் 194 பேரினால் பாதுகாப்புச் செயலாளருக்கு மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டது.**



# சினிமா துளிகள்





## நடிகராகும் இயக்குநர் ஷங்கரின் மகன்

இயக்குநர் ஷங்கரின் இளைய மகள் அதிதி, கார்த்திக்கு ஜோடியாக விருமன் படத்தில் நடித்துள்ளார். 2டி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் சார்பாக சூர்யா தயாரித்துள்ள இந்தப் படத்தை முத்தையா இயக்கியுள்ளார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். இந்தப் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் இயக்குநர் ஷங்கரின் மகன் ஆர்ஜித்தும் நடிகராக களமிறங்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தை காதல், கல்லூரி, வழக்கு எண் 18/9 படங்களின் இயக்குநர் பாலாஜி சக்திவேல் இயக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

ஆர்ஜித் முறையாக நடிப்பு பயிற்சி பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் படம் வித்தியாசமான கதையம்சத்துடன் கூடிய படமாக இருக்கும் எனவும், ஒரு நடிகராக அவரது திறமையை வெளிப்படுத்தக் கூடிய கதை என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகலாம்.

## விஜய் ஆண்டனிக்கு ஜோடியாகும் 3 கதாநாயகிகள்

தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமாகி, தற்போது நடிகராக வலம் வந்து கொண்டிருக்கும் விஜய் ஆண்டனியின் அடுத்த படத்தில் 3 கதாநாயகிகள் நடிக்கிறார்கள்.

விஜய் ஆண்டனி 'தமிழ்படம்' மூலம் பிரபலமானவர், டைரக்டர் அமுதன்.

இவரது இயக்கத்தில், ஒரு புதிய படம் தயாராகிறது. இந்தப் படத்துக்கு, 'ரத்தம்' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இதில், விஜய் ஆண்டனி கதாநாயகனாக நடிக்கிறார்.

அவருக்கு ஜோடிகளாக மகிமா நம்பியார், நந்திதா ஸ்வேதா, ரம்யா நம்பீசன் ஆகிய மூன்று பேரும் நடிக்கிறார்கள்.

அரசியல் திகில் படமாக உருவாகி வரும் இதன் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழுவினர் சமீபத்தில் வெளியிட்டனர்.

இன்பினிடி பிலிம் வென்சர்ஸ் தயாரித்து வரும் இதன் படப்பிடிப்பு 40 சதவீதம் முடிவடைந்துள்ளது.

இதே பட நிறுவனத்துடன் இணைந்து, 'கொலை', 'மழை பிடிக்காத மனிதன்' ஆகிய படங்களிலும் விஜய் ஆண்டனி பணிபுரிகிறார்.


## வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்த நாகார்ஜுனா

தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் சமந்தா. இவர் பிரபல தெலுங்கு நடிகரும், நாகார்ஜுனாவின் மகனுமான நாக சைதன்யாவும் சில ஆண்டுகளாக காதலித்து வந்தார். இவர்களது திருமணம் கடந்த 2017 ஆம் ஆண்டு பிரமாண்டமாக நடைபெற்றது. திருமணத்துக்கு பிறகும் தமிழ், தெலுங்கு என பிஸியாக நடித்து வந்த சமந்தா அடுத்தடுத்து வெற்றிப் படங்களையும் கொடுத்தார்.

இதனிடையே சமந்தாவும் நாக சைதன்யாவும் ஒரே நேரத்தில் விவாகரத்து முடிவை தங்களது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டனர். இந்த செய்தி இருவரின் ரசிகர்களுக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சில நாட்களில், நாக சைதன்யா அளித்த பேட்டியில், தனக்கு ஏற்ற ரீல் ஜோடி சமந்தாதான் என்று கூறியிருந்தார்.

அதன்பின் நடிகை சமந்தா தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டிருந்த விவாகரத்து தொடர்பான பதிவை நீக்கினார். இதைவைத்து இருவரும் மீண்டும் இணைய இருப்பதாக கூறப்பட்டது.

இதையடுத்து விவாகரத்து முடிவை முதலில் எடுத்தது சமந்தா என்றும் அதன் பிறகு நாக சைதன்யா ஒத்துக் கொண்டதாகவும் நாகார்ஜுனா கூறியதாக செய்திகள் வெளியானது. இது போலியான செய்தி என்று தற்போது நாகார்ஜுனா விளக்கம் அளித்துள்ளார். அதில், "சமந்தா மற்றும் நாகசைதன்யா பற்றிய எனது அறிக்கையை மேற்கோள்காட்டி சமூக ஊடகங்கள் மற்றும் மின்னணு ஊடகங்களில் வரும் செய்திகள் முற்றிலும் தவறானவை மற்றும் முற்றிலும் முட்டாள்தனம். வதந்திகளை செய்தியாக வெளியிடுவதைத் தவிர்க்குமாறு ஊடக நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.



## 22 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் இணையும் ஜோடி

பொங்கலுக்கு வெளியாகவிருந்த நடிகர் அஜித்தின் வலிமை திரைப்படம் கொரோனா பரவல் காரணமாக தள்ளி வைக்கப்பட்டது. வருகிற மார்ச் மாதம் வலிமை திரைப்படம் வெளியாகலாம் என்று கூறப்படுகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடிகர் அஜித், தயாரிப்பாளர் போனி கபூர், இயக்குநர் வினோத் ஆகியோர் மூன்றாவதாக இணையவுள்ள படத்துக்கான முன்கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கவிருப்பதாக தகவல்கள் பரவின. முன்னதாக வலிமை படத்தின் பின்னணி இசை வினோத்துக்கு பிடிக்காத காரணத்தால் யுவனுக்கு பதிலாக ஜிப்ரான் வலிமை படத்தின் பின்னணி இசையமைத்துள்ளதாக கூறப்படுகிறது.

நடிகர் அஜித்தின் 61 வது படமாக உருவாகும் இந்தப் படத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் ஒரு முக்கிய வேடத்தில் நடிப்பார் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே இருவரும் ஆசை, ராசி, பரமசிவன் ஆகிய படங்களில் இணைந்து நடித்துள்ளனர்.
இதன் ஒரு பகுதியாக இந்தப் படத்தில் நடிகர் அஜித்துக்கு ஜோடியாக தபு நடிக்கவிருக்கிறாராம். ஏற்கனவே ராஜீவ் மேனன் இயக்கத்தில் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் படத்தில் அஜித்துக்கு ஜோடியாக தபு நடித்திருந்தார். கிட்டத்தட்ட 22 வருடங்களுக்கு பிறகு இருவரும் இணையவுள்ளனர்.



## ராஷ்மிகாவின் செயலால் வருத்தமடைந்த ரசிகர்கள்

தமிழில் சுல்தான் படத்தில் கார்த்தி ஜோடியாக நடித்து பிரபலமானவர் ராஷ்மிகா மந்தனா. தெலுங்கு, கன்னட மொழிகளிலும் அதிக படங்களில் நடித்துள்ளார். சமீபத்தில் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியான புஷ்பா படத்தில் நடித்ததன் மூலம் இந்தியா முழுவதும் கவனம் பெற்றார்.

அதேநேரம் ராஷ்மிகாவுக்கு அழகு இருக்கிறது. ஆனால் நல்ல மனது இல்லை என்று ரசிகர்கள் எரிந்து விழும் அளவுக்கு சர்ச்சையிலும் சிக்கியுள்ளார். இதற்கு காரணம் உள்ளது. சமீபத்தில் ராஷ்மிகா மும்பையில் உள்ள ஒரு ஹோட்டலில் இருந்து வெளியே வந்தார். அப்போது ஒரு சிறுமி அவரிடம் எதாவது கொடுங்கள் என்று கேட்கிறாள். அந்த சிறுமியை ராஷ்மிகாவின் பாதுகாவலர்கள் தள்ளிவிட்டனர்.

ஆனாலும் அந்த குழந்தை ராஷ்மிகாவை நோக்கி கையை நீட்டி பசிக்கிறது சாப்பிட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் ராஷ்மிகா அந்த குழந்தைக்கு எதுவும் கொடுக்காமல் சிரித்துக்கொண்டே சென்று காரில் உட்கார்ந்து விட்டார். இந்த வீடியோ வலைத்தளத்தில் வைரலாகி பலரும் ராஷ்மிகாவின் செயலை சாடி வருகின்றனர். மேலும் பல ரசிகர்கள் அந்த குழந்தைக்கு எதாவது கொடுத்திருக்கலாம் என்றும் பதிவு செய்து வருத்தமடைந்திருக்கிறார்கள்.







# பல்சுவை கதம்பம்



## ஃப்ரிட்ஜில் வைத்த உணவுகளை மீண்டும் சூடுபடுத்தி சாப்பிடுவதால் என்ன நடக்கும் தெரியுமா?



மீண்டும் சூடுபடுத்தப்பட்ட பழைய உணவுகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கும். வீட்டில் உணவு மீதமானால், அதை பிரிட்ஜில் வைத்து பிறகு மீண்டும் அதை சூடாக்கி சாப்பிடும் பழக்கம் பலருக்கு உள்ளது.

பழமையான உணவை மீண்டும் சூடுபடுத்தி சாப்பிடுவது உங்கள் ஆரோக்கியத்தில் மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஃப்ரிட்ஜில் வைத்த உணவுகளை மீண்டும் சூடுபடுத்தி சாப்பிடுவதால் ஏற்படும் தீமைகள் பற்றி தெரிந்து கொள்ளலாம் வாங்க..

முட்டையை ஒருபோதும் மீண்டும் சூடாக்கி சாப்பிடகூடாது. முட்டைகளில் புரதச்சத்து மிக அதிகமாக உள்ளது. இதனை மீண்டும் சூடுபடுத்தும் போது விஷமாக மாறும். இது உங்கள் ஆரோக்கியத்தில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும்.

அதுபோல உருளைக்கிழங்கு சேர்த்த பழைய உணவை மீண்டும் சூடுபடுத்தி சாப்பிடக்கூடாது. மீண்டும் சூடாக்குவதன் மூலம் அதன் ஊட்டச்சத்துக்கள் அழிந்து விடுவதோடு இது செரிமான அமைப்பையும் மாற்றுகிறது.

பீட்ரூட்டை உணவை ஒருபோதும் சூடுபடுத்தி சாப்பிடக்கூடாது. இதைச் செய்வதன் மூலம் உடலுக்கு கிடைக்கும் நைட்ரேட் அழிக்கப்படுகிறது. சமைத்து மீந்து போன சிக்கனை ஒருபோதும் மீண்டும் சூடுபடுத்தி சாப்பிடக்கூடாது. இது உங்களுக்கு செரிமான பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

ஒரு போதும் கீரையை ஃப்ரிட்ஜில் வைத்து விட்டு அதை மீண்டும் சூடுபடுத்தி சாப்பிடவே கூடாது. ஏனெனில் அதில் உள்ள நைட்ரேட் சிதைந்து அதன் மூலம் உயிரை பறிக்கும் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்க செய்கிறது.

## படிப்பது எப்படி?

படிப்பது என்பது மூன்று வகையானசெயல்களை உள்ளடக்கியது.
(1) கூர்ந்து கவனித்தல் (Observation)
(2)தொடர்பு படுத்துதல் (Correlation)
(3) செயல்படுத்தல் (Application)

கூர்ந்து கவனித்தல்:
கூர்ந்து கவனித்தல் என்பது நாம் ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது அது எதைப்பற்றிக் கூறுகிறது. எவ்வாறு கூறுகிறது என்பதைக் கவனத்துடன் படிப்பதாகும்.

தொடர்பு படுத்துதல்:
அவ்வாறு நாம் கூர்ந்து கவனிக்கும் புது விஷயங்களை ஏற்கெனவே நமக்கு நன்கு தெரிந்த ஒரு சிலவற்றோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இது நம் நினைவிலிருக்க உதவுகிறது.

செயல்படுத்தல்:
நாம் புதிதாகக் கற்றவற்றைத் தகுந்த சூழ்நிலைகள் வரும்போது பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, நாம் புதிதாக ஒரு செய்யுளைக் கற்றோமென்றால், அதுபோன்ற நமக்குத் தெரிந்த பாடலுடன் தொடர்பு செய்து கொள்வதோடு மட்டுமல்லாமல், பேச்சுப் போட்டி, கடிதங்கள் போன்றவற்றில் நாம் கற்ற அந்த செய்யுள் பாடலைப் பயன்படுத்த வேண்டும். இது கற்றதை மறந்துவிடாமல் இருக்க உதவுகிறது.

கற்றல் செயற்பாங்கு: (Learning Process)
கவனத்தோடு கேட்பது அல்லது படிப்பது:
என்ன பாடம் - அதிலிருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்பது தெளிவாகத் தெரிந்தால் மிக எளிதாகக் கல்வி கற்கலாம்.

குறிப்பு எடுக்கவேண்டும்:
ஆசிரியர் பாடங்களைக் கற்றுத்தரும் போதும், படிக்கும்போதும் குறிப்பு எடுக்கவேண்டும். குறிப்பெடுத்த பின் என்ன கற்றோம் என்பதை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும்.



புதிதாகக் கற்றவற்றை அடிக்கடி சொந்தவார்த்தைகளில் சொல்லிப்பார்க்கவேண்டும். புதிதாகக் கற்றவற்றைத் தகுந்த சூழ்நிலைகள் கிடைக்கும்போதெல்லாம் நடைமுறைப்படுத்தல் அல்லது செயல்படுத்தல்வேண்டும்.

எவ்வாறு படிப்பது?

தலைப்புகளைப் படித்துப் புரிந்துகொண்டு அதனைக் கேள்வியாக மாற்றுவதன் மூலம் நாம் என்ன படிக்கப்போகிறோம் என்பது நமக்கு நன்கு புரியும். முக்கியத் தலைப்புக்குக் கீழ் உள்ள சிறிய தலைப்புகளையும், எடுத்துக்காட்டுகளையும் வரைபடங்களையும் ஆராய்ந்து அறிவதன் மூலம் நாம் படிக்கும் புத்தகம், பாடம் நமக்குக் கூறும் முக்கியக் கருத்து என்ன என்பது தெரியும். ஒவ்வொரு தலைப்புக்குக் கீழ் உள்ள முதல் பகுதியும், பாடத்தின் பின்பகுதியில் உள்ள சுருக்கமான தொகுப்புகளும் மற்றும் வினாக்களை நன்கு படித்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு செய்தபின், நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்பதை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும்.

ஒருதாளில் நீங்கள் தெரிந்து கொண்ட அனைத்தையும் எழுதிப் பார்க்கவேண்டும். அதனைச் சரிபார்த்து, மேலும் என்ன தெரியவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு மீண்டும் படித்தால் அப்பாடத்தை எளிதாய் நம் மனத்தில் நிறுத்த முடியும். ஒரு பாடத்தைப் படிக்கத் தொடங்கும் முன் எந்த முறையில் படிப்பது என்பது மிக அவசியம். புத்தகத்தை எடுத்தவுடன் முதல் பத்தியில் இருந்து மனப்பாடம் செய்ய ஆரம்பித்துவிடக்கூடாது. கீழ்கண்ட முறையைப் பின்பற்றிப் படிக்க ஆரம்பித்தால் மிக எளிதாகக் குறுகிய நேரத்தில் மனத்தில் நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

படிக்கப்போகும் பாடம் முழுவதையும் மேலோட்டமாக வாசிக்கவேண்டும். தலைப்புகளுக்கும், துணைத் தலைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இதனால் இப்பாடம் எதைப் பற்றியது என்பது விளங்கும். பாடச் சுருக்கத்தை நன்றாகப் படிக்கவேண்டும்.

இதிலுள்ள சில வார்த்தைகளைப் படிக்கும்போது மனத்தில் கேள்விகள் எழும்.
(எடுத்துக்காட்டு: உயிரியலில் சைட்டோபிளாசம் என்ற சொல்லை வாசிக்கும்போது சைட்டோபிளாசம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் வரும்.)

வினா எழுப்புதல்: (Asking Questions)
பாடச்சுருக்கத்தை வாசித்த பிறகு, பாடத்திலுள்ள தலைப்புகள் அனைத்தையும் கேள்விகளாக மாற்றி நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் அதைத் தெரிந்து கொள்வதற்கான ஆர்வம் அதிகரிக்கும். எதற்காக இதைப் படிக்கிறேன். அதன் பயன் என்ன? என்பதை அறிந்து கொள்வதற்கான ஆர்வம் அதிகரிக்கும்.
(எடுத்துக்காட்டு)
அறிவியலில் மின்னாற் பகுப்பு என்ற தலைப்பை வாசிக்கும்போது மின்னாற்பகுப்பு என்றால் என்ன? என்ற கேள்வியை மனத்தில் எழுப்ப வேண்டும்.)

வாசித்தல் (Read):
அர்த்தம் புரியும்படி கவனமாக வாசிக்க வேண்டும். படித்தவற்றை நமக்கு ஏற்கெனவே தெரிந்தவற்றோடு தொடர்புப்படுத்தி எடுத்துக்காட்டோடு படிக்க வேண்டும்.

புத்தகத்தில் அதிகமாக அடிக்கோடிடுவதைத் தவிர்க்கவேண்டும். மிகவும் முக்கியமான வார்த்தைகளை மட்டும் அடிக்கோடிட வேண்டும். இதனால் திரும்பிப் பார்க்கும் போது குழப்பமில்லாமல் எளிதாகப் பாடத்தை நினைவிற்கு கொண்டு வர முடியும்.

திரும்பச் சொல்லிப் பார்த்தல்:

வாசித்து முடித்தபிறகு, முக்கியமானவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து சொல்லிப்பார்க்க வேண்டும். இம்முறையானது படித்தவற்றை நினைவில் நிறுத்திக் கொள்ள மிகச் சிறந்த வழியாகும். படித்தவற்றை சொந்த வார்த்தைகளில் சத்தமாகச் சொல்லிப் பார்க்க வேண்டும். மேற்கண்ட முறைகளைப் பின்பற்றி ஒரு பிரிவை முடித்தவுடன் அடுத்த பிரிவிற்குச் செல்லவேண்டும்.

தேர்வு எழுதிப் பார்த்தல்:

இந்த முறைகளில் பாடம் முழுவதையும் படித்து முடித்த பிறகு மாதிரித் தேர்வு எழுதிப் பார்க்க வேண்டும். ஒரு முறை முதலிலிருந்து அனைத்தையும் திரும்பிப்பார்க்கவேண்டும். தலைப்பும் எவ்வாறு மற்றவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கடைசியாக பாடச்சுருக்கத்தை இன்னொரு முறை வாசிக்கவேண்டும்.

# தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்ட போர்! - என்.சரவணன்

**கடந்தவார தொடர்ச்சி...**

**சிங்கள நிகழ்ச்சிநிரலின் அங்கம்**

சிங்கள பௌத்தர்களை ஓரணியில் திரட்டி மையப்படுத்தி வாக்கு திரட்டும் சூத்திரத்தை சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டி விரிவாக விளக்கப்படுத்தியவர் ஞானசார தேரர். நாடு முழுவதும் உள்ள பௌத்த விகாரைகளை அதற்கான மையங்களாக ஆக்க முடியும் என்று கூறியவரும் அவர் தான். 2019 ஆம் ஆண்டு நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் அச்சூத்திரத்தை பிரயோகித்து பரீட்சார்த்தமாக வெற்றி கண்டவர் கோத்தபாய. 2020 ஓகஸ்ட் பொதுத்தேர்தலுக்கும் அதே சூத்திரத்தைத் தான் விரிவுபடுத்தியது ராஜபக்ச அணி.

வெல்வதற்கு சிங்கள பௌத்த வாக்குகள் தாராளமாக தமக்குப் போதும் என்கிற முடிவுக்கு வந்திருப்பதை இனங்கான முடிகிறது. இல்லையென்றால் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து 1987 ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறையையே நீக்கிவிடுகிறோம் வாக்கை எங்களுக்குத் தாருங்கள் என்று சிங்கள பௌத்தர்களிடம் கேட்கத் துணிய முடியுமா? அப்படி சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை கவர்ந்திழுப்பதற்கும், அவர்களை திருப்திபடுத்துவதற்குமான நடவடிக்கையின் ஒரு அங்கமே இந்த தொல்லியல் செயலணியின் உருவாக்கம்.

**ஜனாதிபதியின் அதிகார மீறல்.**

அரசியலமைப்பின் 33 வது பிரிவின் கீழான அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டதாக வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்டாலும் அப்படியொரு அதிகாரம் ஜனாதிபதிக்கு சட்டரீதியில் வழங்கப்படவில்லை என்று "நில உரிமைகளுக்கான மக்கள் கூட்டணி" என்கிற வெகுஜன அமைப்பொன்று சமீபத்தில் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டிருந்தது. "நமது அரசியலமைப்பின் 33 வது பிரிவுக்கு ஜனாதிபதி செயலணியை நிறுவுவதற்கு திட்டவட்டமான அதிகாரம் எதுவும் இல்லை. மாறாக, 1978 ஆம் ஆண்டின் 09 ஆம் ஆண்டின் விசாரணைச் சட்டம் சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழுக்களை அமைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது. ஒரு செயலணியை அமைக்கும் விசேட அதிகாரங்கள் எதுவும் ஜனாதிபதிக்கு இல்லை. "

அரசியலமைப்பின் படி இதுபோன்ற அனைத்து செயல்களையும் நிறைவேற்ற ஜனாதிபதி 33.2 (h) பிரிவின் விரிவான வரைவிலக்கணம் வாய்ப்பை வழங்குகிறது என்று எவரும் நம்பக்கூடும் என்று நில உரிமைகளுக்கான மக்கள் கூட்டணி அறிவித்திருந்தது. தொல்லியலின் பேரால் எந்தவொரு மக்களும் தமது நிலங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படுவதை நியாப்படுத்திவிட வாய்ப்பு இதனால் திறக்கிறது என்றும் சிறுபான்மைச் சமூகங்களின் நிலங்களின் மீது கை வையாதே எச்சரித்தது அவ்வமைப்பு.

இவ்வமைப்பு நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் சமூகங்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறியும்முயற்சியாக ஒரு விசாரணைக்கு குழுவை அமைத்து அமர்வுகளை நடத்தியது. முல்லைத்தீவில் இடம்பெற்ற அமர்வின் போது, அங்கு பேசிய ஒருவர் "தொல்பொருளியல் திணைக்களத்தினைச் சேர்ந்தோர் இரவு வேளைகளில் வருவார்கள். அப்போது எதையாவது புதைத்து விட்டுச் செல்வார்கள். அடுத்த நாள் அதனைக் கிண்டி எடுத்துவிட்டு, அந்தப் பிரதேசம் பௌத்தர்களின் புனித பூமி என்று செல்லுவார்கள்." என்று கூறுகிறார்.

**ஆக்கிரமிப்புக் கருவியாக தொல்லியல்**

2009 ஆம் ஆண்டு யுத்த முடிவின் பின்னர் தமிழர்களை பலவீனப்படுத்திவிட்டதாக நம்பும் சிங்களத் தரப்பு முஸ்லிம் சமூகத்தை ஒடுக்குவதற்காக இலக்கு வைத்து நகர்வதை அவதானிக்க முடிகிறது. அதற்கு சாதகமாக கடந்த வருட ஈஸ்டர் குண்டுவைப்பு சம்பவங்களை ஆக்கிக்கொண்டது. அச்சம்பவங்களைக் காரணம் காட்டி தொடர்ச்சியாக முஸ்லிம் மக்களை ஒடுக்குகின்ற பணிகள் தொடர்ந்து வருகின்றன. கிழக்கில் தொல்லியல் செயலணி தமிழ் மக்கள் மீது மட்டுமல்ல முஸ்லிம் மக்கள் மீதும் அதே அளவு பாதிப்பை ஏற்படுத்த வல்லவை. செயலணி அமைக்கப்பட்டதும் முதல் நடவடிக்கையாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில் கடற்கரையை அண்டிய பகுதியைச் சூழ உள்ள காணிகளை அபகரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

அங்கே முகுது விகாரை (கடல்விகாரை) உள்ள பகுதியில் கடந்த மே 14 ஆம் திகதி சென்ற பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன பாதுகாப்பு அதிகாரிகளைக் கூட்டி அவ்விகாரைப் பகுதியின் பாதுகாப்பை ஸ்திரப்படுத்துமாறு ஆணையிட்டுவிட்டுச் சென்றார். பதிதாக அமைக்கப்பட்ட தொல்லியல் செயலணியின் முதலாவது கூட்டம் யூன் 10 ஆம் திகதி கூட்டப்பட்டபோது அங்கே உரையாற்றிய கமல் குணரத்ன முகுது விகாரைப் பகுதியில் நிரந்த கடற்படை துணைத்தளம் ஒன்றை ஏற்படுத்திவிட்டதாக அறிவித்தார்.

இலங்கையின் தொல்லியல் என்பது மானுடவியல் சார் தேடலுக்குப் பதிலாக மதத்தின் வாயிலாக வரலாற்றை நிறுவ முனையும் தொல்லியல் தேடல்களாக சுருங்கிவிட்டிருக்கிறது. அதுவும் பௌத்த மதத் தேடலுடன் மாத்திரம் அது வரையறுக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் பௌத்தம் பரவுவதற்கு முன்னர் சைவ சமய நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் இருந்திருக்கிறார்கள். வேறு இயற்கை வழிபாட்டு முறைகளைக் கொண்ட இனத்தவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் ஆனால் இலங்கை அரச அனுசரணையுடனான தொல்லியல் ஆய்வுகள் அவற்றை புறக்கணிக்கின்றன. அதன் மூலம் ஏனைய மத நம்பிக்கை கொண்டவர்களின் வரலாறுகளை உத்தியோகபூர்வமாக புறந்தள்ளிவிடுகிறது. வடக்கு கிழக்கில் பௌத்த எச்சங்களைத் தேடும் அரசு வடக்கு கிழக்குக்கு வெளியில் உள்ள சைவ எச்சங்களைத் தேட எத்தனித்ததுண்டா. அல்லது தமிழ் தொல்லியல் ஆய்வாளர்கள் அதனை மேற்கொள்ள வழி தான் விடுவார்களா என்ன?

இலங்கையின் இனப்பிரச்சினை தமிழ் - சிங்கள பிரச்சினையோடு மட்டு நின்றுவிடவில்லை. மாறாக "சிங்கள - பௌத்த" ஒ "தமிழ் - சைவ சிக்கலாகவே" அடையாளங்கொண்டு இருந்து வந்திருக்கிறது. தமிழர்களையும் சைவர்களையும் ஆக்கிரமிப்பு சமூகமாகவே சிங்கள தரப்பு புனைந்து பரப்பி வந்திருக்கிறது. சைவத்துக்கு எதிராக பௌத்தத்தை முன்னிறுத்துவதும் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களை முன்னிறுத்துவதும் சமாந்திரமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. சிங்களப் பேரினவாதத்தின் நிகழ்ச்சிநிரலில் தொல்லியல் புனைவுகளும் அதன் வழியான ஆக்கிரமிப்பும் முதன்மை இடத்தில் உள்ளன. எனவே சிறுபான்மைச் சமூகங்களின் அச்ச உணர்வு தலைதூக்கியுள்ளது.

கிழக்கில் பௌத்த தொல்லியல் இடங்கள் உள்ளன என்பது மறுப்பதற்கில்லை. அவை இலங்கையின் பண்பாட்டு, மரபுரிமைக்கு உரியது என்பதும் உண்மையே. ஆனால் அவை சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பு வடிவத்தில் நுழையத் தொடங்கியுள்ளன. ஆக்கிரமிப்பின் சூழ்ச்சியாக நுழைகின்றன. கடந்த கால அனுபவங்கள் இந்த முஸ்தீபுகள் மீது ஐயம்கொள்ள வைக்கின்றன.

கூடவே இன்றைய சைவத் தமிழர் தரப்பு பௌத்தத்தை தமதல்லாததாக பார்ப்பதால் அவற்றை சிங்கள பௌத்தர்கள் கொண்டோடி விடுகின்றனர். "எங்கள் தமிழ் பௌத்த மூதாதையரின் தொல்லியல் சான்றுகளே இவை" என்கிற வாதத்தை எங்கேயும் காணோம். இங்கே தமிழர்கள் சைவர்களாகவும், பௌத்தர்களாகவும் வாழ்ந்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ள மதப்பெருமிதம் இடம்கொடுக்குதில்லை. இது சிங்கள பௌத்தர்களுக்கு சாதகமாக அமைந்து விடுகிறது. அந்த பௌத்தர்கள் நாங்கள் தான் என்று சிங்கள பௌத்தர்கள் தமது மரபுரிமையாக பிரகடனப்படுத்திக்கொண்டு செல்லும் போது அதை மறுப்பதற்கோ, எதிர்ப்பதற்கோ தார்மீகமற்றவர்களாகவும், கையாலாதவர்களுமாக தமிழர் ஆகிவிடுகின்றனர்.



## சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

ந மது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை மு றையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.

தீண்டாமையை தீவிர கொள்கையாகவும், உணவு உண்பதையே தெய்வமாக கருதும் வரை நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேற முடியாது.

அடிமைகளின் குணமாகிய பொறாமையை முதலில் அழித்துவிடு.

எ ப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

த ன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அனுகக் கூடாது.

உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.

பலவீனம் இடையறாத சித்ரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து. அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

சு யநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

ந ீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! (ஆனால் முயற்சி தேவை)

நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு.

சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.

ப கை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

வலிமையே மகிழ்ச்சிகரமான நிரந்தரமான வளமான அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

தோ ல்விகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். லட்சியத்திலிருந்து 1000 தடவை வழுக்கி வி ழுந்தாலும், லட்சியத்துக்கு உழைப்பதில் பிழைகள் நேர்ந்தாலும் திரும்பத் திரும்ப அந்த லட்சியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். லட்சியத்தை அடைய 1000 தடவை முயலுங்கள். அந்த 1000 தடவை தவறினாலும் இன்னுமொரு முறை முயலுங்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள்.

வெற்றிகளை சந்தித்தவன் இதயம் பூவை போல் மென்மையானது.
தோல்வி மட்டுமே சந்தித்தவன் இதயம் இரும்பை விட வலிமையானது.

இதயம் சொல்வதை செய் வெற்றியோ தோல்வியோ அதை தாங்கும் சக்தி அதற்கு மட்டும் தான் உண்டு.

நீ பட்ட துன்பத்தை விட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.

உண்மைக்காக எதையும் துறக்கலாம், ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக் கூடாது. பொ ய் சொல்லி தப்பிக்காதே. உண்மையை சொல்லி மாட்டிக்கொள். பொய் வாழ விடாது. உண்மை சாகவிடாது.

கீழ்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.

எ ந்த குடும்பத்தில் உள்ள பெண்மை கொண்டாடப்படவில்லையோ, அந்த வீடும் பாழ் அந்த நாடும் பாழ்.

## ரெட்டெட்டி - பழங்குடி மக்களால் பாதுகாக்கப்படும் உலகின் முதல் யானைக்குட்டிகள் பாதுகாப்பகம்

*கென்யாவின் வடக்கு பகுதியில் வாழும் சம்புரு (Samburu) பழங்குடி மக்கள் யானைக் குட்டிகளை பாதுகாப்பதற்காக, 2016 ஆம் ஆண்டு இந்த பாதுகாப்பகத்தை தொடங்கியுள்ளனர். ரெட்டெட்டி (Reteti) பாதுகாப்பத்தில் - வேட்டையாடுதல், வறட்சி, யானை மனித மோதல் போன்ற காரணங்களால் கைவிடப்பட்ட இளம் யானை குட்டிகளை காப்பாற்றி பராமரித்து மறுபடி காட்டில் விடுகின்றனர். ஒவ்வொரு வருடமும் 10 முதல் 25 யானை குட்டிகள் இவர்களால் காப்பாற்றப்படுகின்றன. நல்ல விஷயம் என்னவென்றால் இந்த காப்பகத்தை சுற்றி வேட்டையாடுதல் கூட குறைந்துள்ளது.*

*காட்டு விலங்குகளுடன் இணைந்தே தங்கள் வாழ்க்கையை அமைத்துள்ள இம்மக்கள், தம் கண்முன்னே பல விலங்கினங்கள் முற்றிலும் அழிந்து போனதை பார்த்துள்ளனர். உதாரணமாக 1900களில் அப்பகுதி முழுவதும் நிறைந்திருந்த காண்டாமிருகங்கள் இன்று அறவே இல்லை. இவையனைத்தும் சம்புரு மக்கள் மனதில் பேருயிர்களை காக்க வேண்டுமென்ற எழுச்சி தோன்ற ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். பெண்களும் யானைப் பாகன்களாக இருப்பது இந்த யானைக் குட்டி காப்பகத்தின் மற்றொரு சிறப்பு. பெண்கள் தங்களுடன் குழந்தைகளையும் அழைத்து வருவதால், யானைகளைப் பற்றியும், அவற்றைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றியும் சிறுவயதிலேயே அவர்கள் அறிந்து கொள்கின்றனர். வருங்கால சமுதாயமாவது வேட்டையாடிகளாக மாறாமலிருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கையாக உள்ளது.* - Dr.Vanathi Faizal, Zoology.

## திருவண்ணாமலையில் சித்தர்கள் அதிகம் ஏன்?



திருவண்ணாமலை மலை இருக்கிறதே. அதுவே பிரமாண்டம். பிரபஞ்ச ரகசியம். அதாவது, பிரபஞ்சம் தோன்றிய காலத்தில் இருந்தே இந்த மலை இருப்பதாகப் புராணங்கள் சொல்கின்றன. சுமார் 260 கோடி வருடப் பழைமை வாய்ந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள். மலையே சிவம். அதாவது சிவலிங்கம். அந்த மலையைச் சுற்றி, அதாவது மலைலிங்கத்தைச் சுற்றி, 1008 சிவலிங்கங்கள் புதைந்திருப்பதாகச் சொல்கின்றனர். இந்த மலையையும் மலையைச் சுற்றிப் புதைந்திருக்கும் 1008 சிவலிங்கங்களையும் சுற்றித்தான் கிரிவலம் வந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு சிவலிங்கமும் கண்ணுக்கு தெரியாத தெய்வீக அலைகளை மலை முழுவதும் பரப்பி வருகின்றன. இதனால் மாதந்தோறும் பௌர்ணமி நன்னாளிலும் தமிழ் மாதத்தின் பிறப்பான முதல் நாளிலும், ஒவ்வொரு பிரதோஷ நாளிலும், சித்த புருஷர்களும் ஞானிகளும் யோகிகளும், சூட்சும ரூபமாக இன்றைக்கும் கிரிவலம் வந்து, ஈசனை வணங்கி வழிபடுகிறார்கள் என்பதாக ஐதீகம். மலையின் மகாத்மியம் மலையளவு இருக்கின்றன. திருவண்ணாமலை எனும் புண்ணிய க்ஷேத்திரம், நம்மைப் போன்ற பக்தர்களுக்கான திருத்தலம் தான். ஆனால் அது சித்தர்களின் பூமி. புனித பூமி. எத்தனையோ சித்தர்கள், இங்கு வந்திருக்கிறார்கள். வந்து தவமிருந்திருக்கிறார்கள். திரும்பமனமில்லாமலேயே இங்கேயே தங்கி, ஜீவ சமாதியாகி இன்னும் தவத்தில் மூழ்கியிருக்கிறார்கள். இன்றைக்கும் சூட்சும ரூபமாய் இருந்து, தவத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதாக ஐதீகம்!

**ஏன் சித்தர்கள் பூமியாக திருவண்ணாமலை இருக்கிறது...**

நம் மன அதிர்வுகளை புத்தி தன் கட்டுபாட்டுக்குள் கொண்டு வராமல் எத்தகைய சித்துக்களையும் செய்ய இயலாது. இயல்பாகவே புவியியல் அமைப்பிலேயே எண்ணங்களை நம் கட்டுக்குள் கொண்டுவரக்கூடிய அதிர்வுகளை கொண்டு திருவண்ணாமலையானது அமைந்துள்ளது. நம் மனதில் கோபம், ஆக்ரோஷம், குழப்பம், கவலை ஆகியவை எழும் போது நம் உடலை சுற்றி உள்ள அலைகள் 14 ஹெர்ட்ஸ்க்கு மேல் இருக்கும். இதனை பீட்டா அலைகள் என கூறுகின்றனர். இந்நிலையில் மனம் நம் கட்டுப்பாட்டில் இருக்காது. நாம் ஓய்வெடுக்கும் போது (ஆழ்ந்த தூக்கத்தின் போது) உடலை சுற்றி உள்ள அலைகள் 14 ஹெர்ட்ஸ்க்கு கீழே இருக்கும். அந்த அலைகளை அல்ஃபா அலைகள் என கூறுகின்றனர். முயற்சி செய்தால் நம் எண்ணங்களை நம் கட்டுக்குள் கொண்டு வரலாம். அதே உடல் தியான நிலையில் இருக்கும் போது எட்டு ஹெர்ட்ஸ்க்கு கீழே இருக்கும். அதை தீட்டா அலைகள் என்கிறனர் விஞ்ஞானிகள். நம் எண்ணங்களை நம் இயக்கங்களை எளிதாக நம் கட்டுக்குள் கொண்டு வரலாம். இதற்காகவே உலகெங்கிலும் உள்ள சித்தர்கள் இங்கே தேடி வருகின்றனர்.

திருவண்ணாமலையானது இயல்பாகவே தீட்டா அதிர்வுகளை கொண்டு உள்ளது. இதனால் தவ நிலையில் உள்ள சித்தர்களின் உடலில் இருந்து இந்த அலைகள் வெளிப்பட்டு கொண்டே இருக்கும். இதற்காகவே இங்கே சித்தர்கள் சமாதி அடைந்திருக்கிறார்கள். சித்தர்களின் பூமியாக திருவண்ணாமலை விளங்கும் மர்மம் இதுதான். இறைவன் எங்கு குடியிருக்கிறானோ அங்குதான் சித்தர்களும் குடியிருப்பார்கள். சித்தர்களுக்கு எல்லாம் தலயாய சித்தர் சிவபெருமான்தான். தலைவர் இருக்கும் இடத்தில்தானே தொண்டர்களும் குடியிருப்பார்கள்? அதனால் தான் திருவண்ணாமலையில் சிவ பெருமானுக்கு உறுதுணையாக, காலம் காலமாக நாம் பெரிதும் போற்றும் பதினெட்டு சித்தர்களும், அவர்களுக்கு பக்கபலமாக 188 சித்தர்களும் இன்றும் அருபமாக நடமாடிக் கொண்டு இருக்கிறார்கள். கைலாய மலையில் கூட காண கிடைக்காத அதிசயம் இது.

இருநூற்றுக்கும் அதிகமான சித்தர்கள் திருவண்ணாமலையில் அண்ணாமலையாரை தரிசித்ததாகவும், அவற்றில் சுமார் 25க்கும் அதிகமான சித்தர்கள் இங்கு ஜீவசமாதி ஆனதாகவும் அகத்தியர் தான் இயற்றிய அகத்தியப் பெருமான் ஜீவநாடியில் எடுத்துரைத்துள்ளார். அவற்றுள் தகவல்கள் சேகரித்து கிடைக்க பெற்ற 20 சித்தர்கள் பற்றி ஒவ்வொன்றாகக் காணலாம். திருவண்ணாமலையில் அவதரித்தவர் அருணகிரி நாதர். சிற்றின்ப மோகத்தால் சீரழிந்து வாழ்க்கையில் சலிப்படைந்து, பிறவியை வெறுத்து அண்ணாமலையார் ஆலய வல்லாள மகாராஜன் கோபுரத்தின் மீதிருந்து குதித்து உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றபோது, முருகப்பெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். "முத்தைத்தரு" என அருணகிரிக்கு முருகன் அடியெடுத்துக் கொடுக்க திருப்புகழ் தோன்றியது. 15-ம் நூற்றாண்டிலே திருவண்ணாமலையிலே வாழ்ந்தவர்.

திருவண்ணாமலைக்கு வந்து ஞானகுருவாக இரு என்று அண்ணாமலையாரின் நேர்முக அழைப்பினால் ஞானியானவர். சீடரையே குருவாக்கிய செந்தமிழ் யோகி குகை நமச்சிவாயர். திருவண்ணாமலை தீர்த்தக் குளத்து நீரையே திரட்டிக் குடமாக்கி (கி.பி.1290) அதிலேயே தண்ணீரை எடுத்துச் சென்று, அண்ணாமலையாருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டவர் சித்த மகா சிவயோகி பாணி பத்திரசாமி. உண்ணாமுலை அம்மனிடமே உணவைக் கேட்டுப் பாடி தேவியின் திருக்கரங்களால் பொங்கலைப் பெற்றவர். தில்லைக் கோயிலின் திரைச் சீலையிலே தீப்பிடித்ததை திருவண்ணாமலையில் இருந்தபடியே அறிந்து தீயைத் தேய்த்து அணைத்த ஞானச் செல்வர் குரு நமசிவாயர். திருவண்ணாமலை ஆதினத்தின் முதல் குருவாகி குன்றக்குடி ஆதினத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி தேசிகர்.

திருவண்ணாமலைப் பகுதியிலே ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்க, ஏரியை அமைத்து, உண்ணாமல் தவமிருந்து, மழையைப் பொழிய வைத்து ஊரையே செழிக்க வைத்தவர் மங்கையர்கரசியார். தொண்ணூறு வயது வரை நாள்தோறும், திருவண்ணாமலையைத் தவறாமல் வலம் வந்து, அந்தப் புண்ணியதால் அண்ணாமலையானை நேரில் கண்டு பேறு பெற்றவர் சோணாசலத் தேவர். யாழ்பாணத்திலே பிறந்து தில்லையாடியின் பேரருளால் திபரு அருணையிலே பெரும் புதையல் பெற்று, திருக்குளமும், திருமடமும் அமைத்து நல்லறங்களை நாளெல்லாம் கூறி மக்களைக் காத்த ஞானப்பிரகாசர்.

பாதகர்களைத் திருத்துவதற்காக, பழுக்கக் காய்ச்சிய இரும்புச் செருப்பை அணிந்து நடந்தவர் வீரவைராக்கிய மூர்த்தி சுவாமிகள். ஐந்நூறு சீடர்களைப் பாடுபட்டு உருவாக்கி, அண்ணாமலையானின் புகழைப் பரப்பியவர். நூல்கள் பலவற்றை எழுதி, சைவ சமயப் பெருமைகளை உலகறியச் செய்த வேதாகம, சமய சாத்திர வித்தகரான அப்பைய தீட்சிதர். காணாமற்போன பூஜைப் பேழையை, அண்ணாமலையானின் திருக்கரங்களால் பெறும் பேறு பெற்றவர் 16-ம் நூற்றாண்டில் குருதேவர் மடத்தில் தீட்சை பெற்று சிவப்பிரகாசர் எனும் ஞானியைக் கண்ட ஞானமணி குமாரசாமி பண்டாரம்.

வாய் பேச இயலாத ஊமையாய்ப் பிறந்து, திருவண்ணாமலையானின் பேரருளால் பாடும் திறனைப் பெற்றவர். தில்லையிலே திளைத்து, திருவாரூரிலே தியாகேசர் சன்னதி முன்னால் முக்தி பெற்றவர் தட்சிணாமூர்த்தி சுவாமிகள். காவிரியாற்றின் நீரையே எண்ணெயாக்கித் தீபமேற்றியவர். பூமியிலிருந்து தீ ஜுவாலையை வரவழைத்து தனது திருமேனியையே அக்னிதேவனுக்கு ஆஹுதியாக்கிய ஆதிசிவப்பிரகாசர் சுவாமிகள்.

கரிகாற்சோழன் காலத்திய பாதாளலிங்க மூர்த்தியை 16-ம் நூற்றாண்டு இறுதியில் பூஜித்தவர். அதே இடத்தில் விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயர் ஆயிரங்கால் மண்டபம் கட்டியபோது, பாதாளலிங்கத்தை மாற்றிவிடாமல் பாதுகாத்த ஞானயோகி தம்பிரான் சுவாமிகள். தனது மரணத்தைத் தானே உணர்ந்து ஜீவ சமாதி கண்டவர். ஜில்லா கலெக்டர் ஐடன் துரையின் கடும்நோயைத் தீர்த்து வைத்தவர். இருபுறமும் வரிப்புலிகள் காவலிருக்க ஞானத்தவம் செய்தவர். ஈசான்ய மடாலயத்தின் ஆதிகுரு (1750-1829) ஸ்ரீலஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர் சுவாமிகள்.

கேரள மாநிலத்தில் பிறந்து, பாரத நாடெங்குமுள்ள புண்ணிய ஷேத்திரங்கள் சென்று வழிபட்டு இறுதியாக தியானத்திற்குகந்த தெய்வத் திருமலை திருவண்ணாமலைதான் எனத் தீர்வு கண்டு மேட மலையில் முருகப் பெருமானுக்கு கோயில் அமைத்து வழிபட்டவர். தனது வாழ்நாள் முழுவதும் மக்களிடம் தொடர்ந்து ஈடுபாடு கொண்டு பக்தியை வளர்க்கப் பாடுபட்டவர் சற்குரு சுவாமிகள்.

திருவண்ணாமலை வீதியிலே புரண்ட போது கிடந்து அருவுருவான அண்ணாமலையே உமா மகேஸ்வரன் எனக் கண்டுணர்ந்து தியானித்தபடி வருவோர்க்கெல்லாம் பேரருள் புரிந்து பார் புகழ் பெற்றவர் பத்ராசல சுவாமிகள். பழனியிலிருந்த திருவண்ணாமலை வந்து ஆலயத்தில் உழவாரப் பணி புரிந்தவர். தினமும் அன்னக்காவடி சுமந்து அடியார்களின் பசிப்பிணி தீர்த்தவர். ஏழை, எளிய மக்கள் மேல் இரக்கம் கொண்டு சேவை புரிந்தவர் (1922), பாதாள லிங்கக் குகையிலே பால ரமணரைப் பல காலம் பாதுகாத்த சிவ முனிவர் பழனி சுவாமிகள்.

பூமிக்குள் புதைந்து கிடக்கும் புதையலை ஊடுருவி காணும் ஞான விழி பெற்ற புண்ணியத்தால், முடிக்கப்படாது பாதிக்கோபுரமாய் நின்ற திருவண்ணாமலையில் உள்ள வடக்கு கோபுரத்தைப் பூர்த்தி செய்தவர். மக்களின் தீராத நோய்களையெல்லாம் பஞ்சாட்சர மந்திரம் சொல்லித் திருநீறு தந்ததன் மூலம் தீர்த்து வைத்த புனிதவதி அம்மணியம்மாள். திருநெல்வேலியிலே அவதரித்துத் திருவருணையிலே முருக தரிசனம் கண்டவர். எல்லையில்லாத் தமிழ் வண்ணப் பாக்களோடு கம்பத்து இளையனார் எனப்படும் திருவண்ணாமலை முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்து வாழ்த்திய இசைஞானி வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839-1898) திருவண்ணாலை தீபத்திரு மலைப் பாதையிலே, அங்கம் புரள உருண்டு தவழ்ந்து அன்றாடம் வலம் வருவதையே லட்சியமாய்க் கொண்டவர்.

திருவண்ணாமலையிலுள்ள அறுபத்து மூவர் மடாலயத்தின் ஆரம்ப கால ஞான குரு அங்கப் பிரதட்சண அண்ணாமலை சுவாமிகள். கருவிலேயே திருவுடையவராய் காஞ்சியில் பிறந்து திருவண்ணாமலைத் தலத்தில் வாழ்ந்த மகான் ஞானச் சித்தர் சேஷாத்திரி சுவாமிகள். (1870-1929). அண்ணாமலையார்க்கே என்னை ஆளாக்குவேன்" என்று கன்னிப் பருவம் வரை காத்திருந்தவர். கண்ணுதற் கடவுள் கனவிலே வந்து அருள் புரிந்தார். கண் விழித்ததும் தலைமுடி சடையாகி விட்டிருந்தது. திருவண்ணாமலை சென்று இறுதிவரை ஆலயத்தில் பணியாற்றிய சடைச்சியம்மாள் என்ற ஜடினி சண்முக யோகினி அம்மையார்.

துறவு கொள்வதே பொது சேவைக்கு உகந்ததென்று 36 வயது முதல் 103 வயது வரை (1882-1985) திருவண்ணாமலை மற்றும் தருமபுரிப்பாதையிலே திருப்பணி பலபுரிந்து, பொது மக்களுக்கு அத்தியாவசியமான சேவைகளையும், அவசரத் தேவைகளையும் மேற்கொண்டு, பரிபூரண பக்தியால் அண்ணாமலையானின் பேரருள் பெற்ற தம்மணம் பட்டி அழகானந்த அடிகள். உண்ணாமல் உறங்காமல் அண்ணாமலையானின் நினைவிலே பன்னிரண்டு ஆண்டுகள் தனிமையில் கடும் தவம் செய்து தொடர்ந்து மலையிலேயே வாழ்ந்தவர் ராதாபாய் அம்மையார். திருவண்ணாமலை மண்ணிலே ஓரடிக்கு 108 லிங்கங்கள் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்தியவர். பஞ்சாட்சர நமசிவாயம் 1008 மந்திர ஜபத்துடன் தெய்வீகத் திருமலையை ஒவ்வொரு அடியாக நடந்து கொண்டு வலம் வந்து பேரின்ப ஞானநிலை கண்டு பிறவிப் பிணி தீரப் பெற்றவர் இறை சுவாமிகள். 1917-ல் பிறந்து ஆயிரத்தெட்டு முறை அண்ணாமலை அங்கப் பிரதட்சண வலம் கண்டவர். தேவர்களும் சித்தர்களும் கிரிவலம் புரிவதை ஞானக்கண்ணால் அறிந்து கூறிய மாதவச் செல்வர் இசக்கி சுவாமிகள்.

திருச்சுழி கிராமத்திலே பிறந்து, மதுரையிலே கல்வி பயின்று, திருவண்ணாமலையானின் நினைவால் திருவருணை வந்து, உண்ணாமல் உறங்காமல் கடும் தவம் மேற்கொண்டு மா தவஞானியாய், மகரிஷியாக உலகப்புகழ் பெற்றவர் ரமண மகரிஷி (1879-1950). விரட்டுவதற்காக வீசிய கல் பறவையின் உயிரையே வாங்கிவிட்டதால் 1918-ல் கங்கைக் கரையிலே பிறந்த அவர் அமைதியைத் தேடி காவிரிக் கரை வரை அலைந்தார். பல ஊர்களும் அலைந்து திரிந்து முடிவிலே ரமண மகரிஷியிடம் சரண் அடைந்தார். குருவருளால் அர்த்தநாரீஸ்வரரின் திருவருள் பெற்றார். அவர்தான் 1959 முதல் குடுகுடுப்பாண்டி போன்ற திருக்கோலமுடன் திருவண்ணாமலையிலே உலா வந்த சிவயோகி, ராம் சுரத்குமார்.

*- சித்தர்களின் குரல் முகநூல் பக்கத்திலிருந்து...*

# சிறார்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி - அவுஸ்திரேலிய அரசு அங்கீகாரம்

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் பிரிட்டனில் 17 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸாக பயன்படுத்த ஃபைசரின் தடுப்பூசிக்கு அவுஸ்திரேலியாவிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2,465,811 உயர்ந்துள்ளது. கொரோனா தொடங்கியதிலிருந்து அந்நாட்டில் மொத்தம் 3,465 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது பல நாடுகளில் காணப்படும் இறப்பு விகிதத்தை விட மிகக் குறைவு. இந்நிலையில் 16 மற்றும் 17 வயதுடைய சிறார்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைக்கு அவுஸ்திரேலிய மருத்துக் கட்டுப்பாட்டாளர் அனுமதி அளித்துள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் பிரிட்டனில் சிறார்களுக்கு பூஸ்டராகப் பயன்படுத்தப்படும் ஃபைசரின் தடுப்பூசிக்கு அவுஸ்திரேலியாவிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஒமைக்ரோன் பரவல் காரணமாக கொரோனா மூன்றாவது அலையை தடுக்க மக்கள் பூஸ்டர் தடுப்பூசி போடுவதை விரைவுபடுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதிக அளவில் கொரோனா தடுப்பூசி போடப்பட்ட நாடுகளில் அவுஸ்திரேலியாவும் ஒன்று. அந்த நாட்டில் 93 சதவிகிதத்திற்கும் அதிகமானோர் இரண்டு தவணை தடுப்பூசியும், 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 35 சதவீதம் பேர் பூஸ்டர் டோஸ் தடுப்பூசியும் பெற்றுள்ளனர். மேலும் 5 முதல் 11 வயதுள்ள குழந்தைகளுக்கு இந்த மாத தொடக்கத்தில் இருந்து தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.



# அமெரிக்காவுக்கு சீனா கடும் எச்சரிக்கை

சீனாவின் மனித உரிமை மீறல்களால் குளிர்கால ஒலிம்பிக்கிற்கு அதிகாரப்பூர்வ குழுவை அனுப்பப்போவதில்லை என்று அமெரிக்கா கடந்த மாதம் அறிவித்தது நினைவுகூரத்தக்கது.

சீனாவில் பீஜிங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி வரும் 4-ந் திகதி தொடங்குகிறது. 20-ந் திகதி முடிகிறது.

தைவான் விவகாரத்தில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. இது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் எதிரொலிக்கும் என்று சீனா கருதுகிறது. ஏற்கனவே சீனாவின் மனித உரிமை மீறல்களால் குளிர்கால ஒலிம்பிக்கிற்கு அதிகாரப்பூர்வ குழுவை அனுப்பப்போவதில்லை என்று அமெரிக்கா கடந்த மாதம் அறிவித்தது நினைவுகூரத்தக்கது.

இந்த நிலையில், அமெரிக்காவுக்கு சீனா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு மந்திரி ஆண்டனி பிளிங்கனிடம் பேசிய சீன வெளியுறவு மந்திரி வாங் யி, "பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும். தைவான் விவகாரத்தில் நெருப்புடன் விளையாடுவதை நிறுத்திக்கொள்ளுங்கள். சீனாவுக்கு எதிராக வட்டம் போடுவதை நிறுத்துங்கள்" என்று எச்சரிக்கை விடுத்தார்.






# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம்

43 வருடங்களின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான உத்தேச சட்டமூலம் வர்த்தமானியாக வெளியிடுவதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரம் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை இராஜதந்திர சமூகத்தினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தடுப்புக் காவல் ஆணைகள், தடை உத்தரவுகள், உத்தரவுகளை நீதித்துறை மறுஆய்வு செய்தல், குற்றம் சாட்டப்பட்டவர்களின் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பது, நீண்ட கால காவலில் வைப்பதைத் தடுப்பது ஆகியவற்றை விரைவுபடுத்த முயல்கிறது.

நீதவான்கள் மற்றும் நீதித்துறை வைத்திய அதிகாரிகளை அணுகுவதற்கும், தடுப்புக்காவலின் போது சித்திரவதைகளைத் தடுப்பதற்கும், நாளாந்தம் வழக்குகளை விசாரிப்பதற்கும் விசேட திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் - வேட்புமனு தாக்கல் தொடங்கியது

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் அடுத்த மாதம் (பெப்ரவரி) 19-ந் திகதி ஒரே கட்டமாக நடத்தப்படுகிறது. இதையடுத்து தேர்தலை சந்திக்க அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரம் காட்டி வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் (28) தொடங்கியது. இதையடுத்து சென்னை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் அரசியல் கட்சியினர் தங்களது வேட்பு மனுக்களை (28) முதல் தாக்கல் செய்யத் தொடங்கினார்கள்.
சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளுக்கு 37 இடங்களில் வேட்பு மனுக்கள் பெறப்பட்டது.

தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணியில் இன்னும் வார்டு பங்கீடு பேச்சுவார்த்தைகள் முடிந்து யார், யார் போட்டியிடுகிறார்கள் என்பது பற்றிய விவரங்கள் வெளியாகவில்லை.

இதன் காரணமாக முதல் நாளில் பெரிய கட்சிகளை சேர்ந்தவர்கள் மனுதாக்கல் செய்யவில்லை. சுயேட்சையாக களம் இறங்குபவர்களே வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

சென்னை மாநகராட்சி பகுதிகளை போன்று நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் வேட்புமனு தாக்கல் (28) தொடங்கியது. அனைத்து மாவட்டங்களிலும் சுயேட்சை வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் தங்களது வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய பெப்ரவரி 4-ந் திகதி கடைசி நாளாகும். கடந்த சனிக்கிழமை பணி நாள் என்பதால் அன்றைய தினம் வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம் என ஏற்கனவே தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாக இருப்பதால் மனுக்களை தாக்கல் செய்ய முடியாது. இதனால் அரசியல் கட்சியினர் தங்களது கட்சி வேட்பாளர்களை விரைந்து தேர்வு செய்து அவசரம், அவசரமாக மனுக்களை தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது.

# விளையாட்டு செய்திகள்

## ஜுனியர் உலக கோப்பை: ஆப்கானிஸ்தான் திரில் வெற்றி

ஜுனியர் உலக கோப்பை தொடரில் இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் வீரர் நூர் அகமது 30 ரன்கள் மற்றும் ஒரு விக்கெட் வீழ்த்தி ஆட்டநாயகன் விருது பெற்றார். ஜுனியர் உலக கோப்பை போட்டிகள் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், குரூப் சி பிரிவில் 2ம் இடம் பிடித்த ஆப்கானிஸ்தான் அணியும், குரூப் டி பிரிவில் முதல் இடம் பிடித்த இலங்கை அணியும் மோதின. டொஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட் செய்த ஆப்கானிஸ்தான் அணி 47.1 ஓவரில் 134 ரன்களுக்கு ஒல் அவுட்டானது. அப்துல் ஹாதி 37 ரன்னும், நூர் அகமது 30 ரன்னும் எடுத்தனர். இலங்கை அணி சார்பில் வினுஜா ரான்பால் 5 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

இதையடுத்து, 135 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. ஆப்கானிஸ்தான் அணியினரின் அசத்தலான பீல்டிங்கில் இலங்கை அணி சிக்கியது. இலங்கை அணியில் துனித் வெல்லலகே அதிகபட்சமாக 31 ரன் எடுத்தார். 45வது ஓவரில் வெற்றிக்கு 11 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் இலங்கை அணி 6 ரன்களை மட்டுமே எடுத்து ஒல் அவுட்டானது. இந்த ஆட்டத்தில் 4 பேர் ரன் அவுட்டாகினர். இதன்மூலம் ஆப்கானிஸ்தான் 4 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஆப்கானிஸ்தான் சார்பில் பிலால் சமி 2 விக்கெட், நூர் அகமது, நவீத் சட்ரான், இஜாருல்லா நவீத் மற்றும் கரோடே ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இலங்கை அணிக்கு எதிரான இந்தப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியினர் எக்ஸ்ட்ராசாக 34 ரன்கள் விட்டுக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## லசித் மாலிங்க பந்துவீச்சு வியூக பயிற்றுவிப்பாளராக நியமனம்

எதிர்வரும் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்திற்கான இலங்கை தேசிய அணியின் பந்துவீச்சு வியூக பயிற்றுவிப்பாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வறிவித்தலை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட்டின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, பெப்ரவரி 11ஆம் திகதி ஆரம்பமாகும் குறித்த கிரிக்கெட் தொடரின் இடைக்கால பயிற்றுவிப்பாளராக ருமேஷ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக, இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இன்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நட்சத்திர பந்துவீச்சாளரான லசித் மாலிங்க, இலங்கை அணியின் ஒரு நாள் மற்றும் ரி20 அணிகளின் முன்னாள் தலைவராவார். மாலிங்க, ஒரு விசேட பயிற்சியாளராக அவருக்கு வழங்கப்பட்டுள்ள குறுகிய காலப் பதவியில், இலங்கையின் பந்துவீச்சாளர்களுக்கு தந்திரோபாய விடயங்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கி, பந்துவீச்சு வியூகங்களுக்கான திட்டங்களை ஆடுகளத்தில் செயல்படுத்த வீரர்களுக்கு உதவுவார் என, இலங்கை கிரிக்கெட் நிறுவனம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது. மாலிங்கவின் பரந்த அனுபவமும், புகழ்பெற்ற ஓட்டமற்ற பந்துவீச்சுகள் தொடர்பான நிபுணத்துவமும், குறிப்பாக இந்தத் தொடரின் T20 வடிவத்தில், அணிக்கு பெரிதும் உதவும் என்று நம்புவதாக இலங்கை கிரிக்கெட் சுட்டிக்காட்டியுள்ளது. தனது நியமனம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மாலிங்க, எம்மிடம் பல திறமையான இளம் பந்துவீச்சாளர்கள் உள்ளனர். எனது அனுபவத்தையும் அறிவையும் அவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களின் மேம்பாட்டுக்கு நான் உதவுவேன் எனத் தெரிவித்துள்ளார்.





## அவசர அறிவிப்புக்கு வருத்தம் தெரிவித்த சானியா மிர்சா

இந்தியாவின் டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, 35 வயதான அவர் 2003-ம் ஆண்டு முதல் சர்வதேச போட்டிகளில் விளையாடி வருகிறார். சானியா மிர்சா 6 கிராண்ட்சிலாம் பட்டங்களை கைப்பற்றி உள்ளார். பெண்கள் இரட்டையர் பிரிவில் 3 பட்டங்கள், கலப்பு இரட்டையர் பிரிவில் 3 பட்டங்கள் என 6 கிராண்ட்சிலாம் பட்டங்கள் வென்றுள்ளார். ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிக்கு பிறகு இந்த சீசனுடன் ஓய்வு பெறப் போவதாக சானியா மிர்சா ஏற்கனவே தெரிவித்திருந்தார். நடந்த கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் சானியா- ராஜீவ்ராம் ஜோடி தோல்வி அடைந்தது.

இந்த தோல்வியை தொடர்ந்து டென்னிஸ் போட்டியில் இருந்து சானியா விடைபெற்றதாக செய்திகள் வெளியாகின. இதுகுறித்து சானியா மிர்சா கூறியதாவது, இந்த சீசனுடன் ஓய்வு பெற இருப்பதாக சமீபத்தில் அறிவித்து இருந்தேன். இதுபற்றியே தொடர்ந்து கேட்கின்றனர். ஓய்வு முடிவை முன்னதாக அவசரமாக அறிவித்ததற்காக வருந்துகிறேன். என்னை பொறுத்தவரையில் இந்த ஆண்டு முழுவதும் போட்டிகளில் விளையாடுவேன். வெற்றி அல்லது தோல்வி எதுவாக இருந்தாலும் 100 சதவீத திறமையை வெளிப்படுத்துகிறேன். சில நேரங்களில் வெற்றி கிடைக்கும். ஏமாற்றமும் வரும். நான் விளையாடும் போட்டிகள் அனைத்திலும் வெற்றிபெற விரும்புகிறேன். விரைவில் எனது ஓய்வு முடிவை அறிவிப்பேன் என சானியா மிர்சா தெரிவித்துள்ளார்.



## ஓய்வு பெறும் டில்ருவன் பெரேரா

இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட சுழல் பந்துவீச்சு சகலதுறை வீரர்களில் ஒருவரான டில்ருவன் பெரேரா, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவது குறித்து இலங்கை கிரிக்கெட்டிடம் அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வாவுக்கு, மின்னஞ்சல் மூலம் தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார் என இலங்கை கிரிக்கெட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 39 வயதான டில்ருவன் பெரேரா, இலங்கைக்காக 43 டெஸ்ட், 13 ஒருநாள் மற்றும் 3 20க்கு 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி டெஸ்ட் பந்துவீச்சாளராக வலம்வந்த அவர், டெஸ்ட் கிரிக்கெட்டில் 161 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

'நான் இன்னும் சிறிது காலம் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவேன். ஆனால், எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுப்பது இதுதான் சரியான நேரம் என்று நான் நினைக்கிறேன். விளையாட்டில் சில சிறந்த வீரர்களுடன் விளையாடும் பாக்கியமும் மரியாதையும் எனக்கு கிடைத்துள்ளது. அருமையான நினைவுகளுடனும் மகிழ்ச்சி நிறைந்த இதயத்துடனும் நான் சர்வதேச கிரிக்கெட்டி வாழ்க்கைகக்கு விடைகொடுக்கிறேன்' என்று தில்ருவான் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அரங்கில் நாட்டிற்கு ஆற்றிய சேவையைத்தவிர, உள்ளூர் கிரிக்கெட் அரங்கிலும் டில்ருவன் பெரேரா பல மகத்தான சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். இதில் 200 க்கும் மேற்பட்ட முதல்தரப் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 808 முதல்தர விக்கெட்டுகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்காக டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களில் ஐந்தாவது இடத்தில் டில்ருவன் பெரேரா உள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



# உலக பார்வை



## மத்திய ஆசிய நாடுகளுடன் இணைந்து கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சியில் ஈடுபட இந்தியா முடிவு



ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் கூட்டு பணிக்குழுவை அமைக்க இந்தியா மற்றும் மத்திய ஆசிய நாடுகள் திட்டமிட்டுள்ளன. இந்தியா-மத்திய ஆசிய நாடுகள் ஒத்துழைப்புக்கான உச்சி மாநாடு முதல் முறையாக நடைபெற்றது. காணொலி காட்சி மூலம் நடந்த இந்த மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில் கஜகஸ்தான் அதிபர் காசம்-ஜோமார்ட் தோகயேவ், உஸ்பெகிஸ்தான் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவ், தஜிகிஸ்தான் அதிபர் எமோமலி ரஹ்மான், துர்க் மெனிஸ்தான் அதிபர் கர்பங்குலி பெர்டிமுகமதோவ், கிர்கிஸ்தான் அதிபர் சதிர் ஜபரோவ் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடக்க உரையாற்றிய பிரதமர் மோடி, பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு இந்தியா மற்றும் மத்திய ஆசியா இடையே பரஸ்பர ஒத்துழைப்பு அவசியம் என்று வலியுறுத்தினார். இந்த உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் (மேற்கு) ரீனாத் சந்து செய்தியாளர்களிடம் பேசியதாவது, அடுத்த 30 ஆண்டுகளுக்கான வரைபடத்தை தயார் செய்ய பிரதமர் மோடி பரிந்துரைத்துள்ளார். இந்தியா மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உச்சிமாநாடு அளவிலான கூட்டத்தை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த உச்சி மாநாடு 2024 இல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டில் பங்கேற்ற தலைவர்கள் ஆப்கானிஸ்தான் குறித்து நெருக்கமான ஆலோசனைகளை தொடர ஒப்புக்கொண்டனர். மேலும் மூத்த அதிகாரிகள் மட்டத்தில் ஒரு கூட்டு பணிக்குழுவை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு இந்தியாவும் மத்திய ஆசிய நாடுகளும் உறுதி பூண்டுள்ளன. இந்தியா மற்றும் ஆர்வமுள்ள மத்திய ஆசிய நாடுகளுக்கு இடையே கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சிகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## பிளாஸ்டிக் பரப்புகளில் ஒமிக்ரோன் வைரஸ் 8 நாள் உயிர்வாழும்




ஒமிக்ரோன் வைரஸ் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிருடன் இருக்கும், பிளாஸ்டிக் பரப்புகளில் 8 நாட்களுக்கு மேல் உயிர்வாழும் என்று தெரியவந்துள்ளது. ஒமிக்ரோன் வைரஸ் பற்றி ஜப்பானில் உள்ள கியோட்டா மாகாண மருத்துவ பல்கலைக்கழகம் ஒரு ஆய்வு நடத்தி உள்ளது. இந்த ஆய்வின்போது, சீனாவின் வூகானில் உருவான கொரோனா தொடங்கி பல்வேறு மாறுபாடுகள் வரையில், சுற்றுச்சூழல்தன்மையின் வேறுபாடுகளை ஆராய்ந்து உள்ளனர். இதில் ஒமிக்ரோன் வைரஸ் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிருடன் இருக்கும், பிளாஸ்டிக் பரப்புகளில் 8 நாட்களுக்கு மேல் உயிர்வாழும் என்று தெரியவந்துள்ளது.

கவலைக்குரிய மாறுபாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ள உருமாறிய கொரோனா வைரஸ்கள், சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை தொடர்பு பரிமாற்றத்தின் அபாயத்தை அதிகரிக்கும் மற்றும் அவற்றின் பரவலுக்கு பங்கு அளிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

கொரோனா வைரஸ் பிளாஸ்டிக் பரப்பின் மீது 56, ஆல்பா 191.3, காமா 59.3, பீட்டா 156.6, டெல்டா 114 மணி நேரம் வாழும், ஒமிக்ரோன் 191.3 மணி நேரம் வாழும். ஒமிக்ரோன் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிர்வாழ்கிறபோது, ஆல்பா 19.6, பீட்டா 19.1, காமா 11, டெல்டா 16.8 மணி நேரம் உயிர்வாழுமாம்.

## ரஷ்யா- உக்ரைன் இடையில் போர் நிறுத்தம் தொடரும்

பிரான்ஸில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ரஷ்யா, உக்ரைன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். சோவியத் ஒன்றியத்தின் ஒரு அங்கமாக இருந்து வந்த உக்ரைன், கடந்த 1991ம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு பின் தனிநாடாக உருவானது. கலாசார ரீதியிலும் சமூக ரீதியிலும் ரஷ்யாவோடு பல தொடர்புகளைக் கொண்டுள்ளது. உக்ரைனில் இப்போதும் ரஷ்ய மொழி பேசுவோர் கணிசமாக வாழ்ந்து வருகின்றனர்.



இந்த சூழலில் அமெரிக்கா, கனடா மற்றும் 27 ஐரோப்பிய நாடுகளின் ராணுவ கூட்டமைப்பான நேட்டோ உக்ரைனை தன்னுடன் இணைத்து கொள்ள விரும்புகிறது. ஆனால் தனது எல்லையையொட்டி அமைந்துள்ள உக்ரைன் நேட்டோவில் இணைந்தால் தங்களது தேசியப் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ரஷ்யா கருதுகிறது.

இதையடுத்து உக்ரைனை தங்களது அமைப்பில் இணைக்க மாட்டோம் என்று நேட்டோ உறுதிமொழி அளிக்க வேண்டும் என்று ரஷ்யா வலியுறுத்தி வருகிறது. இந்த வலியுறுத்தலுக்கு நேட்டோ அமைப்பு மற்றும் அமெரிக்கா உடன்படாததால் உக்ரைன் எல்லையருகே சுமார் 1 லட்சம் படையினரை ரஷ்யா குவித்துள்ளது.

உக்ரைன் மீது படையெடுத்து அந்த நாட்டை தன்னுடன் இணைத்துக் கொள்வதற்காக ரஷ்யா படை குவிப்பில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன. இதையடுத்து இருநாடுகளின் எல்லையில் போர் பதற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து உக்ரைன், ரஷ்யா ஆகிய நாட்டின் பிரதிநிதிகள் பிரான்ஸ் நாட்டில் பேச்சுவார்த்தை நடத்தினர். 8 மணி நேரம் நடைபெற்ற இந்த பேச்சு வார்த்தையில் கிழக்கு உக்ரைனில் போர் நிறுத்த நடவடிக்கைகள் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே மாதத்தில் 6வது முறை அடுத்தடுத்து 2 ஏவுகணைகளை ஏவியது வடகொரியா

ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்கிற ஹைபர் சோனிக் ஏவுகணை சோதனை நடத்தியதை தொடர்ந்து வடகொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்தது. ஆனாலும் வடகொரியா அடங்கவில்லை.

வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மீண்டும் மோதல் உச்சகட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. நாங்கள் அணுசக்தி திறன்களை ஓரளவு நிறுத்தி வைப்பதற்கு பதிலாக, எங்கள் மீதான பொருளாதார தடைகளை படிப்படியாக விலக்கிக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவிடம் வடகொரியா கூறியது. அதை அமெரிக்கா ஏற்கவில்லை.

இந்த நிலையில், தற்போது புத்தாண்டு பிறந்தது முதல் வடகொரியா கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்கிற ஹைபர் சோனிக் ஏவுகணை சோதனை நடத்தியதை தொடர்ந்து வடகொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்தது. ஆனாலும் வடகொரியா அடங்கவில்லை. அந்த நாடு 2 பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளை ஏவி, கடலில் செலுத்தியதாக தென்கொரிய ராணுவம் தெரிவித்தது.

இந்த மாதத்தில் வடகொரியா நடத்திய 6-வது ஏவுகணை சோதனை இதுவாகும். இதுபற்றி தென்கொரியாவின் கூட்டுப்படை தலைவர்கள் கூறுகையில், "வடகொரியா குறுகிய தொலைவு ஏவுகணைகள் இரண்டை 5 நிமிட இடைவெளியில் கடற்கரை நகரமான ஹாம்ஹங்கில் இருந்து ஏவியது. அவை 190 கி.மீ. தொலைவுக்கு பறந்தன. பின்னர் அவை கடலில் விழுந்தன" என தெரிவித்தனர்.

தன் மீதான அணு ஆயுதமற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக முடக்கப்பட்ட அமெரிக்கா தலைமையிலான பொருளாதார தடைகளை விடுவிப்பதை நோக்கமாக கொண்டு, நிறுத்தப்பட்ட நீண்டகால பேச்சுவார்த்தைகள் மீது ஜோ பைடன் நிர்வாகத்துக்கு அழுத்தம் தருவதுதான் வடகொரியாவின் நோக்கம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்.

அமெரிக்க இந்தோ பசிபிக் கட்டளை கூறுகையில், "வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனைகள், அதன் ஆயுத திட்டத்தின் சீர்குலைக்கும் தாக்கத்தை எடுத்துக்காட்டும் அதே வேளையில், அமெரிக்கர்களுக்கோ அல்லது பிராந்தியத்துக்கோ அல்லது நமது நட்பு நாடுகளுக்கோ உடனடி அச்சுறுத்தலை ஏற்படுத்தவில்லை" என தெரிவித்தது.

ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, "வடகொரியா நடத்திய ஏவுகணை சோதனைகளால், ஜப்பானிய கடற்கரையை சுற்றி கப்பல் மற்றும் விமானங்களுக்கு சேதம் ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை" என்பதை உறுதிபடுத்தினார். அதே நேரத்தில் வடகொரியாவின் தொடர்ச்சியான ஏவுகணை சோதனை, மிகவும் வருந்தத்தக்கவை, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை மீறுபவை எனவும் அவர் கருத்து தெரிவித்தார்.

2018-ம் ஆண்டு நிறுத்தி வைத்த அணு ஆயுத சோதனையையும், கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்குகிற ஏவுகணை சோதனைகளையும் மீண்டும் தொடங்குவதை பரிசீலிக்க வடகொரிய ஆளும் கட்சியின் அரசியல் விவகாரக்குழு கூட்டத்தில் சமீபத்தில் முடிவு எடுக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது. வடகொரியாவின் முக்கிய கூட்டாளியும், பொருளாதார உயிர்நாடியுமான சீனாவில் 4-ந் திகதி குளிர்கால ஒலிம்பிக் போட்டி தொடங்கி நடந்து முடிந்த பின்னர், வடகொரியா ஆயுத சோதனைகளை மேலும் தீவிரப்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

## நிலவில் மோதவிருக்கும் கைவிடப்பட்ட ரொக்கெட்

அமெரிக்காவை சேர்ந்த தனியார் விண்வெளி நிறுவனமான 'ஸ்பேஸ்எக்ஸ்' கடந்த 2015-ம் ஆண்டு பால்கன் 9 பூஸ்டர் ரொக்கெட்டை ஏவியது. அந்த ரொக்கெட் தனது பணியை நிறைவு செய்துவிட்டு பூமிக்கு திரும்ப போதுமான எரிபொருள் இல்லாத காரணத்தால் அது விண்வெளியிலேயே கைவிடப்பட்டது. இந்த நிலையில் விண்வெளியில் கைவிடப்பட்ட பால்கன் 9 பூஸ்டர் ரொக்கெட் நிலவில் மோத இருப்பதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த ரொக்கெட் வருகிற மார்ச் மாதம் 4-ந் திகதி நிலவின் மீது மோதி வெடிக்கலாம் என்று கணிக்கப்பட்டு இருக்கிறது.

இது குறித்து பேராசிரியர் மெக்டோவல் கூறும்போது, 'பல சகாப்த காலங்களில் கிட்டத்தட்ட 50 பெரிய விண்வெளி பொருட்கள் கண்காணிக்க முடியாமல் போய் உள்ளது. தற்போது பால்கன் ரொக்கெட் நிலவில் மோதுவது உறுதிப்படுத்தப்பட்ட முதல் சம்பவமாக இருக்கலாம். நிலவின் பரப்பின் மீது மோதும் ரொக்கெட் சிறிய பள்ளத்தை ஏற்படுத்தும். வருகிற மார்ச் 4-ந் திகதி பூமியில் இருந்து பார்க்க முடியாத நிலவின் அரைக்கோள பகுதியில் மோதலாம். தற்போது விண்வெளியில் சுற்றித்திரியும் குப்பைகள் அரிதாகவே மோதி வெடிக்கின்றன. இதனால் இப்போது எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படாமல் இருக்கலாம். அதனால் எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. நிலவில் ரொக்கெட் மோதுவதால் ஏற்படும் தாக்கம் சிறிதாகவே இருக்கும்' என்றார். விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்ப போதுமான திறன் இல்லாத காரணத்தால் விண்வெளியிலேயே இலட்சக்கணக்கான விண்வெளி குப்பைகள் சுற்றுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.































இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 30.01.2022 அன்று வெளியிடப்பட்டது.